விலை ரூபா: 8.00 Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 மாசி 25 புதன்கிழமை (09.03.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 80

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

## சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் புனரமைப்பு

# பொதுக்கட்டமைப்புக்கு அரசு தயார்

# புலிகளின் பதிலுக்காக காத்திருப்பு

## மகளிர்தின உரையில் ஜனாதிபதி சந்திரிகா

(நமது நிருபர்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை புனரமைப்பதற்கு விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பை உருவாக்க அரசு தயாராகவுள்ளது.

ஆனால் தமது முடிவை விடுதலைப் புலிகள் எமக்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை.

இனியும் அவர்கள் காலம் தாழ்த்தினால் பொதுக்கட்டமைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் இன்று அடையாள வேலை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் இன்று அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

துணைவேந்தர், பெப்ரவரி மாதம் பேரவைக்குச் சமர்ப்பித்த அறிக்கை மற்றும் அது தொடர்பான தீர்மானம் குறித்த தமது கோரிக்கைகளை துணைவேந்தர் ஏற்க மறுத்ததை கண்டித்தே இவ் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இப் போராட்டத்திலிருந்து பாதுகாப்பு, நீர் விநியோகம் மற்றும் பரீட்சைப் பணிகளில் ஈடுபடுபவர்கள் மட்டும் விலக்களிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இன்று காலை 9 மணிக்கு ஊழியர்கள் அனைவரையும் இராமநாதன் மண்டப முன்றலில் ஒன்றுகூடுமாறு ஊழியர் சங்கம் கேட்டுள்ளது. இவ் ஒன்றுகூடலில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் தொடரும் சூட்டுச் சம்பவம்

### 48 மணி நேரத்தினுள் இருவர் பலி; இருவர் படுகாயம்

(மட்டக்களப்பு)

இலங்கையின் கிழக்கே மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கடந்த 48 மணிநேரத்திற்குள் இடம்பெற்ற மூன்று வெவ்வேறான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களின்போது இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும் இரண்டு பேர் காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்று அதிகாலை 5.30 மணியளவில் மட்டக்களப்பு நகரில் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ள பஸ்தரிப்பு நிலையத்தில் இடம்பெற்ற சம்பவத்தின்போது முன்னாள் புளொட் உறுப்பினரான அழகையா திருவேஸ்வரன் (வயது 36) என்பவர் கொல்லப்பட்டார்.

மூன்று வருடங்கள் மத்திய கிழக்கு நாடொன்றில் தொழில்புரிந்து வந்த இவர் சுனாமியினால் தனது குழந்தை மரணமடைந்ததையடுத்து நாடு திரும்பியிருந்தார் என்றும் மீண்டும் மத்திய கிழக்குப் பயணத்துக்காக கொழும்பு செல்வதற்கு குறிப்பிட்ட பஸ்தரிப்பில் நின்ற சமயம் அடையாளம் தெரியாத நபர் ஒருவர் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்றும் விசாரணைகளை (12 ஆம் பக்கம் பார்க்க)

## காலியில் நேற்று ஆர்ப்பாட்டம்

(காலி)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை எனக்கோரி காலி - மாத்தறை வீதியில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

சுனாமி பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தினை ஏற்பாடு செய்திருந்தனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தினால் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கிணற்றிலிருந்து சிப்பாயின் சடலம் மீட்பு

(வவுனியா)

மர்மமான முறையில் உயிரிழந்ததாகத் தெரிவித்த இராணுவச் சிப்பாய் சடலம் வவுனியா நொச்சிமோட்டைப் பகுதியிலுள்ள கிணறு ஒன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

அண்மையில் வவுனியாவில் இடம்பெற்ற பயிற்சிப் பாசறையொன்றில் கலந்து கொண்டபோது நச்சுத்தன்மை உடலில் பரவியதால் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இராணுவ வீரர்களுக்கு பொறுப்பாக இருந்த அதிகாரியின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு அரசும் புலிகளும் ஒன்றிணையவேண்டும்

### ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவு ஆணையாளர்

(கொழும்பு)

ஒற்றையாட்சியின்கீழ் சமஷ்டித் தீர்வொன்றை இலங்கையில் ஏற்படுத்துவதே சமாதானத்துக்கான சாதகத்தன்மையைப் கொண்டுவரும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவு ஆணையாளர் வெனிற்றா பேரேரோ தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். ஒஸ்லோ உடன்பாட்டின்படி இலங்கைக்கான நிரந்தரத்தீர்வு எட்டப்படுவதையே தமது அமைப்பு விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த மூன்று ஆண்டுகாலமாக யுத்த நிறுத்தம் அமுலில் இருந்தும் சமாதானப் பேச்சுவார்த்தை இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முட்டுக்கட்டையாகவுள்ள இடர்களைக் களைந்து சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என அரசிடமும், விடுதலைப் புலிகளிடமும் அவர் கேட்டுக்கொண்டார்.

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் பேரவைத் தாக்குதல் கண்காணிப்புக்குழு விசாரணை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைக்குள் கடந்த வெள்ளிக்கிழமை இராணுவத்தினர் அத்துமீறிப் புகுந்து தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பாக கண்காணிப்புக்குழுவின் யாழ். மாவட்ட அதிகாரிகள் நேற்றுக்காலை சர்வதேச மாணவர் பேரவைக்குச் சென்று அதன் பொறுப்பாளரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்ட பொருட்களின் விபரங்களை கேட்டறிந்து கொண்ட அவர்கள், இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் மாணவர் பேரவைக்குள் காணப்பட்ட வெற்றுத் தோட்டாக்களையும் அவர்கள் பார்வையிட்டனர்.

இராணுவத்தினரால் மேற்கொண்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

## வீதியில் கூடாரம் அமைத்து அம்பாறையில் ஆர்ப்பாட்டம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் மருதமுனை பிரதேசத்தில் சுனாமிப் பேரலை அனர்த்தத்தினால் வீடுகளை இழந்தவர்கள் வீதியில் இருப்பிடங்களை அமைத்து வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் மட்டக்களப்பு - கல்முனை வீதியில் காலை முதல் போக்குவரத்து சேவைகள் தடைப்பட்டுள்ளன.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் மருதமுனை பிரதேசத்தில் 500 ற்கும் மேற்பட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
யாழ் கொழும்பு
தினசரி விமான சேவை

எக்ஸ்போ எயார்
Your friend in the skies...
யாழ்ப்பாணத்தில் 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
வானத்தில் உங்கள் நண்பன்...
E-Mail: jaffna @ expoavi.com, resaervations @ expoavi. com,

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஓர் இனத்தின் விழி மட்டுமல்ல அதன் உயிரும் மொழி தான்

## மலையகத் தமிழரை விழிப்புடன் இருக்குமாறு ஈழவேந்தன் எம்.பி. எச்சரிக்கை

(கொழும்பு)

சிலாபம் தொடங்கி நீர்கொழும்பு வரை இருந்த நூற்றி ஐம்பது தமிழ்ப் பாடசாலைகளுக்கு இப்பொழுது மூடுவிழா நடைபெற்றுள்ளது. அதுபோல மலையகத் தமிழ்க் கல்லூரிகளுக்கும் அதேகதி ஏற்படக் கூடும. எனவே, மலையகத் தமிழ் மக்கள் அனைவரும் விழிப்புடன் இருக்கவேண்டுமென பூண்டுலோயா தமிழ் மகாவித்தியாலயத்தில் ஈழவேநதன் எம்.பி.உரையாற்றியுள்ளார்.

அண்மையில், பூண்டுலோயா தமிழ் மகாவித்தியாலயத்தில், கல்லூரி முதல்வர் லோகநாதன் தலைமையில் நடைபெற்ற ஆங்கில தினவிழாவில் ஈழவேந்தன் எம்.பி.தொடந்தும் உரையாற்றுகையில்,

மலையகத் தமிழ் மக்களே விழிப்போடு இருங்கள். எக்காரணம் கொண்டும் நீங்கள் தூங்குவீர்களாயின் சிலாபம் தொடங்கி நீர்கொழும்பு வரை தமிழ்ப் பாடசாலைகள் மூடப்பட்டது. போல் மலையகத்திலும் பாடசாலைகள மூடும் ஆபத்து ஏற்பட்டு வருகின்றது.

ஆட்சி மொழி சிங்களம். எனினும், பயிற்சி மொழி தாய் மொழியிலேயே அமையும். எனவே, பயிறசி மொழி தமிழாகவே இருக்கும் என அன்று கூறிய சிங்கள அரசு, காலப்போக்கில் தா்ய் மொழியில் பயிற்சி என்பதை பெற்றோர் விரும்பிய மொழி என மாற்றி பல இடங்களில் தமிழ்ப பாடசாலைகளை மூடியதன் விளைவு, நிர்ப்பந்த நிலையில் தமிழ்ப் பெற்றோர் தம் பிள்ளைகளை சிங்களத்தில் பயிலவிட்டதன் விளைவு, வடமேற்குப் பகுதியில் உள்ள தமிழ்ப் பாடசாலைகள் மூடப்பட அங்கு சிங்களத்திலேயே பயிலும் நிலை உருவாகிக் குடித்தொகைக் கணக்கில் தமிழர் சிங்களவராகவே கணிக்கப்பட்டனர்.

மேலும், கத்தோலிக்க மத ஒருமைப்பாடு என்ற பெயரில், அன்றைய பேராயர் வணக்கத்துக்குரிய தந்தை எட்மன் பீரிஸ் தமிழர்களை சிங்களவராக்கும் சதிமுயற்சிக்குத் துணைபோனார்.

தனிநாயகம் அடிகளார் 1950 களில் வெளியிட்ட 'தமிழ்ச் சால்பு' இதழில் 'தமிழர்கள் சிங்களவர்களாக மாறுகின்றனர்' என்றும் வண.ஞானப்பிரீகாசர் அடிகளார் எழுதிய கட்டுரையை நினைவு கொண்ட ஈழவேந்தன், மலையகத்தில் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் இயங்க முடியாத நிலை தொடருமாயின் மலையகத் தமிழர்களும் காலப் போக்கில் சிங்களவர்களாக மாறும் பேராபத்து உண்டு என்று எச்சரித்தார்.

பூண்டுலோயாவில் அஞ்சல் நிலையங்கள், வங்கிகள் போன்ற திணைக்களங்கள் அனைத்திலும் நிர்வாகம் சிங்களத்திலேயே் நடைபெறுகின்றது. உரிய முறையில் இவற்றோடு தொடர்பு கொள்ள முடியாது மலையகத் தமிழர் படும்பாட்டினை நான் அறிவேன்.

மொழி என்பது ஒரு இனத்தின் விழி மட்டுமல்ல அதன் உயிர் என்பதை நாம் உணர்தல் வேண்டும். மொழி அழிகின்ற போது அந்த மொழி பேசுகின்ற இனம் அழிந்தே போகும் என்பதை உலகநாடுகள் உணர்த்தி நிற்கின்றன என்றும் ஈழவேந்தன் எடுத்துரைத்தார்.

எனினும், தன் உரையின் இறுதியில் இருபத்தோராம் நூற்றாண்டில் வாழ்கின்ற நாம் உலகை இணைக்கின்ற தொடர்பு மொழியான ஆங்கிலத்தை 2 வது மொழியாக நாம் பயின்றுதான் ஆகவேண்டும் என்றும் உணர்த்தினார்.

ஆங்கிலத்தை அறிந்திருப்பது வேறு. ஆங்கிலத்தில் அடிமையாய் இருப்பது வேறு. நாம் ஆங்கிலத்தைப் பயின்றுள்ளோம் என்பதைக் காட்டுவதற்காக அம்மா, அப்பா, மாமா, மாமி போன்ற அருந்தமிழ்ச் சொற்களை மாற்றி, டடி, மம்மி, அங்கிள், ஆன்ரி போன்ற ஆங்கிலச் சொற்களை தமிழில் ஊடுருவ விடுவோமாயின், தமிழ் உருக்குலைந்து போய்விடும் என்று எச்சரித்த அவர், தாயை வைக்கின்ற இடத்தில் தாயையும், சேயை வைக்கிற இடத்தில் சேயையும், நாயை வைக்கின்ற இடத்தில் நாயையும் தகுதியறிந்து வைக்கத் தவறுவோமாயின் நாமே நம்மைத் தாழ்த்திக், காலப்போக்கில் எம் இனத்தின் அழிவிற்கு, நாமே காரணமாகி விடுவோம் என்றும் ஈழவேந்தன் எம்.பி.மேலும் குறிப்பிட்டார். (ற)

## இராசி பலன்

09.03.2005
மாசி 25, புதன்கிழமை
சதுத்தசி பிற்பகல் 05.37 மணிவரை
அவிட்டம் முற்பகல் 06.35 மணிவரை
சதயம் பின்னிரவு 05.19 மணிவரை
இராகுகாலம் 12.23 - 1.53 மணிவரை
சுபநேரம் 04.53 - 06.23 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் கைகூடும், தொழில் விருதகி, பொருள் சேர்க்கை, உடல் நலம். |
| இடபம் | அதிகாரம், செய்தொழில் விருத்தி, தூர தேசச் செய்தி, முயற்சி கைகூடும். |
| மிதுனம் | புதியதிட்டமிடல், பிதாசிந்தை, கட்டுப்பாடு, முயற்சி தாமதம். |
| கடகம் | எதிர்பாராத பிரச்சினை, பெரியோர் வெறுப்பு, காரியதடங்கல், பிரயாண பயம். |
| சிங்கம் | களஸ்திர நன்மை, காரிய அனுகூலம், நண்பர்கள் வருகை, போசன சுகம். |
| கன்னி | தடைப்பட்ட காரியம் கைகூடும், சுவாரஸ்ய மான நிலை, தேக நலன். உறவினர் சந்திப்பு. |
| துலாம் | புத்திரரால் கவலை, முயற்சி தாமதம், சிறுவியாதி, பிரயாணம். |
| விருச்சிகம் | மாதா சுகம், மனச்சஞ்சலம், காரிய தாமதம், புதிய தகவல். |
| தனுசு | கூட்டு முயற்சி, அன்னியர் சந்திப்பு, இனிய சம்பவம், போசன சுகம். |
| மகரம் | பணவிரயம், விவாதம், எடுத்த காரியம் தாமதமாகும், திடீர் நன்மை. |
| கும்பம் | சிந்தனை மிகுதி, உஷ்ண வியாதி, தொழில் மந்தநிலை, முயற்சி கைகூடும். |
| மீனம் | இடமாற்றம், பிரயாணம், திடீர் நன்மை, அமைதிக் குறைவு- |

பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது

—வளவன்

## பாலத்திடல் பகுதியில் இளைஞர் குழு அடாவடி

(துன்னாலை)

சரசாலை வடக்கு பாலத்திடல் பகுதியில் இளைஞர்கள் குழுவொன்று வீதியால் செல்வோர் மீது அடாவடித்தனங்களில ஈடுபடுகின்றனர்.

அத்துடன், தனிமையில் செல்லும் தனியார் கல்வி நிலைய மாணவர்கள் மீதும் தீயவார்த்தைப் பிரயோகத்தை மேற்கொள்வதாகவும் சிலவேளைகளில் வீதித் தடையைப் போட்டு போக்குவரத்துக்கு இடையூறு விளைவிப்பதாகவும் அறியப்படுகிறது.

தமது செயற்பாட்டை தட்டிக்கேட்க எவரும் இல்லையெனக்கருதி இவ்வாறான அடாவடித் தனங்களைப் புரிவதாக அவ் வீதியால் செல்வோர் கூறுகின்றனர். (ப-101)

## துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் காயம்

மட்டக்களப்பு வாழைச்சேனையில் நேற்று முன்தினம் இரவு தமிழ் ஆயுதக் குழு உறுப்பினரொருவர் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்துள்ளார். இவர் பொலநறுவை குடாப் பொககனையைச் சேர்ந்த 20 வயதுடைய சிவராசா ரவீந்திரன் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வெலிக்கந்தையிலிருந்து வாழைச்சேனைக்கு பஸ்ஸில் வந்திறங்கிய இ.போ.ச.டிப்போவிற்கு அருகில் இனந்தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டு சுடப்பட்டுள்ளார்.

தலையிலும் கையிலும் காயமடைந்து வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர், பொலிஸ் பாதுகாப்புடன் தற்போது பொலநறுவை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகின்றார். (க-4)

## இலவச வைத்திய சேவை

(மட்டக்களப்பு)

இலங்கை ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்தியர்கள் அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்து சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலவச வைத்திய சேவையை வழங்கினர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், சமூகசேவைகள் அமைச்சு என்பனவற்றின் அனுசரணையுடன் இந்த வைத்தியசேவை வழங்கப்பட்டுள்ளது. அக்கரைப்பற்று பொத்துவில், பாணமை ஆகிய இடங்களிலும் சிகிச்சை முகாமகள் நடத்தப்படவுள்ளன. நேற்றுமுன்தினம் திருக்கோவில் பிரதேசத்திற்கு விஜயம் செய்த இலங்கை ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய குழுவினர், நலன்புரி நிலையங்களுக்குச் சென்று வைததிய சேவைகளை வழங்கினர். இந்த வைத்திய முகாமில் பலர் கலந்துகொண்டு நன்மையடைந்ததாக எமது பிராந்திய செய்தியாளர் தெரிவித்தார்.(க)

## மலையக மக்களும் தனிநாடு கோரிப்போராடுவார்களா?

### பெரும்பான்மையினத்தவர் மத்தியில் அச்சம்

(கொழும்பு)

மலையகத்திலும் தனிநாடு தொடர்பான சிந்தனைகளை மக்களுக்கு சிலர் வழங்கிவருவதாக ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

இதுகுறித்துக் கருத்துவெளியிட்டுள்ள தேசப் பற்றுள்ள தேசிய இயக்கத்தின் இணைத்தலை வரும் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளருமான விமல் வீரவன்ஸ,

மலையக பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும், அரசசார்பற்ற நிறுவனங்களும், மலையகக் கட்சிகள் சிலவும் அங்கு தனிநாடு குறித்த கருத்துக்களைப் பரப்பிவருவதாகத் தெரிவித்துள்ளார்.

இதறகான கூட்டங்களையும் அவர்கள் நடாததி மக்களின் மனங்களை மாற்றி வருகின்றனர்.

இதனால் இது குறித்து ஜனாதிபதியின கவனத்திற்குக் கொண்டு வந்திருப்பதாகத் தெரிவித்த அவர் இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும். இல்லையேல் மலையகமும் அமைதியற்ற தேசமாக மாறி விடும் எனவும் எச்சரித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க, மலையக மக்களின் நலன் குறித்து அரசு எவ்வித அக்கறையும் காட்டுவதில்லை என்றும் சுனாமியால பாதிப்புற்ற தமிழ்மக்களுக்கு உதவி செய்யும் மலையக மக்களின் விபரங்களை பொலிஸார் சேகரித்து வருவதாகவ்ும் மலையக மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் மலையக மக்கள் மத்தியில் அச்ச உணர்வு தோன்றியுள்ளதாகவும், அவர்கள் சுட்டிக காட்டியுள்ளனர்.

தமிழ் பேசும் மக்கள் பெரும்பானமையினத்தவரால் அச்சுறுத்தப்படுவதையும் பெரும்பான்மையின ஆட்சியாளர்களால் ஓரங்கட்டப்படுவதையும் தம்மால இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது என்றும் தெரிவித்த அவர்கள் தமது சுயநிர்ணய உரிமைககாகப் போராடவேண்டிய சூழ்நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவித்தார். (க-4)

## தேர்த் திருவிழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை சித்திவிநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி ஆலயத்தில் மஹோற்சவம் சென்ற செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியமை குறிப்பிடத்தக்கது.(ப-35)

## பெண்கள் உரிமை தொடர்பான பெண்களுக்கெதிரான பேதங்காட்டலின் அனைத்து வழவங்களையும் ஒழித்தல்சார் இணக்க உடன்படிக்கை.

உறுப்புரை 11.(1)

ஆ. தொழில் விடயங்களில் தெரிவுக்கான ஒரே கட்டளை விதிகளின் பிரயோகம் உட்பட ஒரே தொழில் வாய்ப்புகளுக்கான உரிமை.

மிகுதி நாளை.

# தீவிரவாதிகளின் தாக்குதலில் 12 படைவீரர்கள் மரணம்

## 26பேர் படுகாயம்

(பாகுபா)

ஈராக்கில் நேற்றுமுன்தினம் தீவிரவாதிகள் தாக்கியதில் இராணுவ வீரர்கள பொலிஸார் . உட்பட 12பேர் உயிரிழந்தனர். 26பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் ஈராக்கின் வடகிழக்குத தலைநகரான பாகுபா பகுதியில் நிகழந்தது.

தாக்குதலோடு கார்க்குண்டு வெடிப்பும் நிகழ்த்தப்பட்டுள்ளது.

தாக்குதல் பாகுபா பகுதியிலுள்ள இராணுவச் சோதனைச் சாவடியில் நேற்று முன்தினம் காலை 7மணிக்கு ஆயுதம் தாஙகிய குழுவினர் படைவீரர்களை நோக்கிச் சுட்டனர்.

அதோடு வெடிகுண்டுகளையும் வீசி தாக்கியுள்ளனர். இத்தாக்குதலில் 7 படைவீரர்கள் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.

பாகுபா பகுதியில் பொலிஸார் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு திடீரெனக் கார்க்குண்டு வெடித்ததில் 5 பொலிஸார் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். பலர் காயமுற்றனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் காலை 8மணிக்கு நிகழ்ந்தது.

இந்த இருவேறு தாக்குதல்களில் சுமார் 26 பேர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். (க)




குவைத்தில் உள்ள பெண்கள் தங்களுக்கும் அரசியலில் பங்கு வேண்டும் எனக் கோரி குவைத் நகரத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

# ராதாகிருஷ்ணன் தாக்கப்பட்ட வழக்கு; விஜயேந்திரர் தம்பி ரகு மீண்டும் கைது

(காஞ்சிபுரம்)

ஆடிட்டர் ராதாகிருஷ்ணன் தாக்கப்பட்ட வழக்கில் விஜயேந்திரரின் தம்பி ரகுவைத் தனிப்படை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மந்தைவெளியைச் சேர்ந்த ஆடிட்டர் ராதாகிருஷ்ணன் கடந்த 2002ஆம் ஆண்டு தாக்கப்பட்டார். இந்த வழக்கில் ஜெயேந்திரர், விஜயேந்திரர், அப்பு, ரவிசுப்பிரமணியம் ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர். இந்த வழக்கு விசாரணை சைதாபபேட்டை கோர்ட்டில் நடந்து வருகிறது.

ஆடிட்டர் தாக்கப்பட்ட வழக்கிலும் ரவிசுப்பிரமணியம் அப்ருவராகியுள்ளார். கடந்த சனிக்கிழமை ரவிசுப்பிரமணியததைத் தனிப்படை பொலிஸார் எழும்பூர் 6ஆவது மஜிஸ்திரேட்டு கோர்ட்டில் ஆஜர் படுத்தினர். ஆடிட்டர் தாக்கப்பட்ட வழக்கில் ஒபபுதல் வாக்குமூலம் அளிகக விரும்புவதாகத் தெரிவித்தார்.

ஆடிடடர் ராதாகிருஷ்ணன் தாககப்பட்ட வழக்கிலும் ரவிசுப்பிரமணியம் அப்ருவராகி வாக்குமூலம் அளிப்பதால் இந்த வழக்கும் சுறுசுறுப்படைந்துள்ளது. விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய தனிபபடையினர் ஏறபாடுகள் செய்துள்ளனர்.

ஆடிட்டர் ராதாகிருஷணன் தாக்கப்பட்ட வழக்கில் விஜயேந்திரரின் தம்பி ரகுவைத் தனிப்படை பொலிஸார் கைது செய்துள்ளனர். இவருடன் சேர்ந்து இதுவரை இந்த வழக்கில் 12பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ற)

# என்னைக் கொலை செய்ய அமெ. சதி - ஹுகோ சாவெஸ்

(புதுடில்லி)

தம்மைக் கொல்ல அமெரிக்கா சதி செய்வதாகக் குற்றம் சாட்டியுள்ளார் வெனிசுலா அதிபர் ஹுகோ சாவெஸ்.

கடந்த 3 ஆண்டுகளாக வெனிசுலாவுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொண்டு வருகிறது. மேலும் என்னைப் படுகொலை செய்யவும் அமெரிக்கா திட்டமிடுகிறது. எனக்கு ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் அதற்கு அமெரிக்க அதிபர் புஷ்தான் பொறுப்பு என புதுடில்லியில் நிருபர்களிடம் கூறினார் சாவெஸ்.

சூழ்நிலையின் தீவிரத்தைக் குறைக்க இந்தியா என்னவிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் எனக கேட்டதற்கு 'கோலியாத்தை எதிர்த்து டேவிட் மேற்கொண்டதைப் போல' எனப் பதிலளித்தார் சாவெஸ். (ற)






மீரட் நகரில் நடந்த அகில இந்திய நாய்கள் ஓட்டப்பந்தயத்தில் ஒரு ஆக்ரோஷமான காட்சி.

# நீண்ட மிதவையில் கடலில் சென்று புதிய சாதனை

(லண்டன்)

உலகிலேயே நீண்ட மிதவையில் கடலில் சென்று ஒரு குழுவினர் புதிய சாதனை படைத்துள்ளனர்.

கடலில் மிதவைப் பலகையின் மீது நின்றபடி வீரசாகச விளையாட்டுக்களில ஈடுபடும் போட்டிகள் மேலை நாடுகளில் நடப்பது வழக்கும். ஆஸ்திரேலியாவில் குயின்ஸ்லேண்ட் மாநிலத்தில் கோல்டு கோஸ்ட் நகரில் இப்போது இதில் புதியசாதனை நிகழத்தப்பட்டுள்ளது,

இதற்கு முன்பு 2003இல் உலகிலேயே நீளமான மிதவை என வருணிக்கப்பட்ட 36 அடி நீள மிதவை மீது கடலில சென்று ஒரு குழுவினர் சாதனை படைத்தனர்.

இப்போது அதையும் மிஞ்சும் வகையில் 40 அடி நீள மிதவையில் 47 பேர் கடலில் மிதந்துசென்று சாதனை உருவாக்கியுள்ளனர்.

சமீபத்திய சுனாமியால் பாதித்த மக்களுக்கு நிவாரண நிதி திரடடும முயற்சியாக இது நிகழ்த்தப்பட்டுள்ளது. (க)

# சிறையில் தீ! 118 கைதிகள் பலி

(டொமின்கோ)

டொமினிக் குடியரசில், சிறையில் ஏற்பட்ட தீயில் 118 கைதிகள் கருகி இறந்தனர். 30பேர் காயமடைந்தனர்.

டொமினிக் குடியரசு நாட்டில், ஹிகுவோ சிறைச்சாலை உள்ளது.

தலைநகர் சாண்டோ டொமினிக்கில் இருந்து 150 கிலோமீற்றர் தொலைவில் இது உள்ளது.

இங்கு கைதிகளுக்கு இடையே திடீர் மோதல் ஏற்பட்டது. அப்போது தீ ஏற்படடது. சிறையின் பல பகுதிகளில் தீ பரவியது. 118 கைதிகள் கருகிப் பலியாயினர். 30 கைதிகள் காயமடைந்தனா. (க)

# சவுதியில் இந்தியர் தலை துண்டிப்பு

(றியாத்)

சவுதி அரேபியாவில் இந்தியர் ஒருவரைக் கொலைசெயத சக இந்தியருக்குத தலையைத் துண்டித்து மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

மரண தட்டணை பெறறவர் சக இந்தியரைத் தலையில் கல்லைப் போட்டுக் கொலை செய்துவிட்டு அவரது பணத்தைத் திருடிச்சென்றார்.

இந்த வழக்கை விசாரித்த சவுதி நீதிமன்றம் கொலையாளிக்குத் தலையைத் துண்டித்து மரணதண்டனையை நிறைவேற்ற உத்தரவிட்டது.

அதன்படி ஹப்தார் - அல்-பத்தன் நகரில் தண்டனை நிறைவேற்றப்பட்டதாக சவுதி அரசு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டில் இதுவரை 19 பேருக்கு சவுதி அரசு தலையைத் துண்டித்து மரணதண்டனை நிறைவேற்றியுள்ளது. (க)

# அதிசய ஹோட்டல்

கடப்பை நகரில் ஒரு குடும்பத்தினர் கடந்த 25 ஆண்டுகளாக நடத்தி வரும் ஹோட்டலில் ஒரு தோசையின் விலை 10 காசுதான். சுவையும் தரமும் உடைய இந்தத் தோசையுடன் 3 வகையான சட்னிகளும் பரிமாறப்படுகின்றன. இந்தக் கடையை முனிரெட்டியும் அவரது சகோதரர் புல்லா ரெட்டியும் நடத்தி வருகின்றனர்.

கணவர் இறந்தவுடன் கடப்பைக்கு எங்களை அழைத்துவந்தார் எனது தாயார் சுப்பம்மா. 50 ஆண்டுகளுக்கு முன்பு தோசைக் கடையைத் தொடங்கினார் அவர். முதல் 25 ஆண்டுகளுக்கு ஒரு தோசை ஓரணா (6காசு) என்ற விலைக்கு விற்றுவந்தார். அதன்பிறகு தோசை விலையை 10 காசு என உயர்த்தினார். அவர் நினைவாக தொடர்ந்து அதே விலைக்குத் தோசை விறறுவருகிறோம். இந்தக் ஹோட்டலை நடத்தி கிராமத்தில் 2 வீடுகளையும் கொஞ்சம் விவசாய நிலத்தையும் வாங்கி யுள்ளோம் என்றார் முனிரெட்டி.

தாயாரிடம் இருந்து தோசை சுடும் கலையைக் கற்றுக்கொண்ட முனிரெட்டி ஒவ்வொரு நாளும் காலை 5 மணியில் இருந்து இரவு 11 வரை ஆயிரக்கணக்கான தோசைகளைச் சுடுகிறார். புலா ரெட்டி தோசைகளைப் பரிமாறுகிறார். முனி ரெட்டியின் மனைவியும் புலா ரெட்டியின் மனைவியும் சுத்தப்படுத்தும் வேலைகளைச் செய்கின்றனர்.

5வயதில் இருந்து தொடர்ந்து முனி ரெட்டி ஹோட்டலில் சாப்பிட்டு வருபவர்கள் பலர் உள்ளனர். சில கடின உழைப்புத தொழிலாளர்கள் 20 தோசைகள் வரை சாப்பிடுகிறார்கள். இந்தச் சிறிய ஹோட்டலில் தோசை வாங்க எப்போதும் நீண்ட வரிசையில் மக்கள் பொறுமையுடன் காத்திருக்கிறார்கள். சிலர் 200 முதல் 300 தோசைகள் வரை வாங்கிச் செல்கின்றனர். (ற)

# அவுஸ்திரேலியாவில் இருந்து 74பேர் வெளியேற்றம்!

(சிட்னி)

ஆஸ்திரலேியாவில் அனுமதியின்றி பணியாற்றிய 74 பேரைக் கடந்த திங்கட்கிழமை அவுஸ்திரேலிய குடியேற்ற உரிமை அதிகாரிகள் வெளியேற்றினர்.

இதுபற்றி குடியேற்ற உரிமை அமைச்சர் அமன்டா வான்ஸ்டோன் கூறியதாவது,

வெளியேற்றப்பட்டவர்களில் 57பேர் மலேசியாவைச் சேர்ந்தவர்கள். 17பேர் தாய்லாந்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள சட்டவிரோதமாகக் குடியேறி தென்கிழக்கு அவுஸதிரேலியப் பகுதிகளில் உளள பண்ணைகளில் வேலைபார்த்து வந்தனர். இவர்கள் அனைவரும் தனிவிமானம மூலம் அவரவர் நாட்டிற்கு அனுப்பிவைக்கப் பட்டனர்.

20ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவிலிருந்து வருவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முறையான அனுமதியின்றி தங்கியிருப்போரை அவுஸ்திரேலிய அரசு வெளியேற்றிவருகிறது என்று வான்ஸ்டோன் கூறினார். (க)

மலேசிய மன்னர் சையது சிராஜுதீன் மனைவி ராணி பவுசியாவுடன் ஜப்பானில் 8 நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அவர்களுக்கு ஜப்பான் தலைநகர் டோக்கியோவல் உள்ள அகாசாகா அரண்மனையில் வரவேற்பளிக்கப்பட்டது. அப்போது மலேசிய ராணியும், ஜப்பானிய ராணி மிக்சிகோவும் சிரித்துச் சிரித்துப் பேசுவதைப் படத்தில் காணலாம்.



# இராணுவ ஆக்கிரமிப்பின் கொடூர நிகழ்வுகள்

# தமிழ்ப்பெண்களைப் போராடத்தூண்டியது

## தாயக நெருக்கடிகளே பெண்கள் எழுச்சிக்குக் காரணம் என்கிறார் பத்மினி எம்.பி



தமிழர் தாயகத்தின் தேச நிர்மாணப் பணியில் சரி அரைப்பங்கினரான பெண்களும் முழு வீரியத்துடன் பங்காற்றவேண்டும். ஆனால் பண்பாட்டு ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஒடுக்கப்படும் பெண்கள் இன ரீதியாகவும் ஒடுக்கப்படுவதால் அவர்களால் முழுமையாகப் பங்களிக்கமுடியவில்லை. எனவே அவர்கள் விடுவிக்கப்படவேண்டும். இவ்வாறு தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்துள்ளார்.

ஒடுக்குமுறையில் இருந்து விடுபடுதல் அகரீதியாகவும் புறரீதியாகவும் நடக்கவேண்டும். கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இராணுவ ரீதியான அடக்குமுறை காரணமாகவும், பொருளாதாரத்தடை, போக்குவரத்துத்தடை, இளைஞர்கள், குடும்பத தலைவர்கள் கைதுசெய்யப்படுதல், கொலைசெய்யப்படுதல், காணாமற் போதல் போன்ற காரணங்களால் இளைஞர்களும், குடும்பத் தலைவர்களும் வெளியேறினர். இதனால் பெண்கள் தவிர்க்க முடியாத தேவையின் நிமித்தம் வெளிவந்து கடமைகளைப் பொறுபபேற்கவேண்டியிருந்தது.

போக்குவரத்துத்தடை காரணமாகப் பெருமளவு பெண்கள் தாமே துவிச்சக்கரவண்டியைச் செலுத்தக் கூடியவர்களாக மாறினர். குடும்ப முகாமைத்துவத்தையும் பொறுப்பேற்றனர். இவ்வாறு தமது காரியங்களை மற்றவர்களில் தங்காமல் தாமே பார்க்கக்கூடியவர்களாக மாறினர். இது ஒரு புறரீதியான விடுவிப்பு. அந்த மாற்றம் உள்ளார்ந்த ரீதியாக ஏற்பட்டதல்ல. அதாவது தாமே சிந்தித்து அகரீதியாக ஏற்பட்டதல்ல. எனினும் இதனை ஒரு சாதகமான மாற்றமாகக் கொள்ளலாம்.

இராணுவ ஆக்கிரமிப்பின் கொடூரச் செயல்கள், பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டமை, கொலைசெய்யப்பட்டமை, குழந்தைகள் கொலையுண்டமையானது சுதந்திரமாக வாழவிரும்பிய பல பெணகளைப் போராட்டத்தில் இணையவும் தூண்டியது.

போராட்டத்தில் இணைந்த பெணகள் ஆண்களுக்கு சரிநிகர் சமானமாகப் பெண்களும் அனைத்துப் பரிமானங்களிலும் செயலாற்ற முடியுமென்பதைத் தமிழர் தாயகப் பெணகளுக்கு மட்டுமன்றி அனைத்துலகப் பெண்களுக்கும் வாழ்நதுகாட்டி நிரூபித்துள்ளார்கள்.

இதுவும் பெண்களைப் பொறுத்தவரை, அதாவது எம்மீது திணிக்கப்பட்ட இன ஒடுக்குமுறை பெண்களைப் பொறுத்தவரை அவர்கள் வெளிவருவதற்குத் தூண்டிய வகையில் ஒரு சாதகமான நிலையாக நாம் பார்க்கலாம். இது சமூகப் பெண்களுக்குத் தங்களாலும் முடியும் என்ற எண்ணத்தைக் கொடுத்தது.

அதாவது உலக முன்னேற்றத்திற்கு ஈடாக நாமும் முன்னேற வேண்டும், எமது தேசத்தை நிர்மாணிப்பதில் நாமும் பங்குகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தைப் பெணகளிடம் தூண்டியது. அதற்காக இத்தகைய நோக்கோடு செயல்புரியும் பல பெண் செயலாளிகள் உருவாகியுள்ளனர்.

இவ்வாறு பெண்கள் பண்பாட்டு மையம் இத்தகைய செயலாளிகளை உருவாக்கியுள்ளனர். இத்தகைய பணபாட்டு உயிர்ப்பூக்குனர்களுக்கு போராளிப் பெண்களின் பிரசன்னம் உத்வேகம் ஊட்டுவதாகவும், பாதுகாப்பாகவும் இருக்கின்றது.

பண்பாட்டு உயிர்ப்பூக்குனர்கள் கிராமம் கிராமமாகப் பெண்களைச் சந்தித்து வருகின்றனர். அப்போது அப்பெண்களும் இவர்களைப் போல மாறவேண்டும் சமூகத்தில் செயல முனைப போடு செயற்படவேண்டும்.

புரட்சிக் கவிஞன் பாரதி சொன்னது போல,

"நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத..."

பெண்களாக மாறவேண்டும் என்ற ஆவலைக் கொண்டுள்ளமை தெரிய வருகின்றது. ஆனால் தெரு எங்கும இராணுவம் குடிகொண்டிருப்பது பெண்களின் இவ்விருப்பத்திற்குப் பெரும தடையாகவுள்ளது.

பெற்றோர்கள் தமது பிள்ளைகள் இவ்வாறு உருவாகுவதை விரும்பிய போதும் இராணுவத்திற்கு அஞ்சி பிள்ளைகளை வெளியில் அனுப்பத் தயங்குகின்றனர். தமது பிள்ளைகளை வீட்டுக்குள்ளேயே முடக்கி வைத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகின்றனர். அல்லது பாடசாலைகளுக்கும், பல்கலைக் கழகத்திற்கும மிக அமைதியாகச் சென்றுவிட்டு வந்துவிடுமாறு கூறுகின்றனர்.

சமூகத்தின் சரிபாதியினரான பெண்கள் வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்துகொண்டோ, பாடசாலைகளிலும், பல்லைக்கழகத்திலும் பேசா மடந்தைகளாக நடையின்றுகொண்டோ இருக்க ஒருவளம் நிறைந்த தேச நிர்மாணம் சாத்தியமற்றதாகிவிடும்.

எனவே தமிழர் தாயகத்தின் குடிமனைகளுக்கு அருகில் குடிகொண்டிருக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தை உடனடியாக விலகவேண்டுமென்று நாம் கோரிக்கை விடுக்கின்றோம். தேச நிர்மாணப் பணியில் பெண்களைப் பங்குபற்ற வைப்பதற்கான சூழ் நிலையை உருவாக்கும் பொருட்டு நாம் விடுக்கும் இக்கோரிக்கைக்கு உலகமெங்கும் பரந்துவாழும் பெண்கள் இயக்கங்களும் ஆதரவளிக்க வேண்டுமென்றும் கோருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப)

# யுத்தத்தை ஆரம்பித்து ஜே.வி.பியை

# திருப்திப்படுத்த அரசு முயற்சிக்கின்றது

## த.தே.கூட்டமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஆட்சிப்பீடத்தில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தற்போது யுத்தத்தையே விரும்புகின்றது.

அதனால்தான், இராணுவம் சில தமிழ் ஆயுதக் குழுக்களைப் பயன்படுத்தி கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து படுகொலைகளில் ஈடுபட்டுவருகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

ஜே.வி.பியுடன் தற்போது ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை நீக்கி தொடர்ந்தும் அரசாங்கத்தின் ஆயுட்காலத்தை தக்கவைப்பதற்கு யுத்தத்தை ஆரம்பிப்பது தான் ஒரே வழியென அரசாங்கம் கருதி செயற்படுவதாகவும் கூட்டமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் தற்போது எழுந்துள்ள நெருக்கடி நிலைமைகள் தொடர்பாக கருத்



துக் கேட்டபோதே கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மேற்கண்டவாறு இதனைத் தெரிவித்தனர்.

**கூட்டமைப்பின் சிரேஷ்ட எம்.பி.ஜோசப் பரராஜசிங்கம் கருத்து தெரிவிக்கையில்,**

அரசாங்கத்திற்குள் ஜே.வி.பி பல நெருக்கடிகளை ஏற்படுத்தி வருகின்றது. இடைக்கால நிர்வாகத்தின் அடிப்படையில் புலிகளுடன் பேச்சை ஆரம்பித்தால் அரசைவிட்டு வெளியேறுவோம் என ஜே.வி.பி. எச்சரிக்கை செய்கின்றது.

அதுமட்டுமன்றி சுனாமி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக வடக்கு கிழக்கு மாகாணத்தில் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்தினால கூட வெளியேறுவோம் என ஜேவி.பி அரசை மிரட்டுகின்றது.

இந்தநிலையில் தொடர்ந்தும் அரசாங்கத்தைக் கொண்டுநடத்துவதற்கும், சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதற்கும் ஜனாதிபதிக்கு சங்கடமான நிலை உருவாகியுள்ளது.

சர்வதேச சமூகமும் 'சமாதானப் பேசசை ஆரம்பியுங்கள்', 'சுனாமி நிவாரணப் பணிகளை சரியானமுறையயல் மேற்கொள்ளுங்கள்' எனப் பல அழுத்தங்களை கொடுத்துவருகின்றது.


ஆகவே, இவற்றை சமாளிப்பதற்கும், ஜே.வி.பியை திருப்திப்படுத்துவதற்கும் தற்போதுளள ஒரே வழி யுத்தத்தை ஆரம்பிப்பதுதான்.

அதனை நோக்கியதாகத்தான் ஜனாதிபதியினதும், அரசாங்கத்தினதும் அண்மைக்கால செயற்பாடுகள் அமைந்துள்ளன. சில தமிழ் ஆயுதக் குழுக்களைப் பயன்படுத்தி சிரேஷ்ட விடுதலைப்புலி உறுப்பினர்களை இராணுவம படுகொலை செய்துவருகின்றமை அதனையே எடுத்துககாட்டுகின்றது.

தமிழ் மக்கள் சமாதானத்தையே விரும்புகின்றனர். அரசாங்கமும் சமாதானத்தை விரும்புவதாக இருந்தால் கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் மீதும் அப்பாவிப் பொதுமக்கள் மீதும் இராணுவத்தின துணையுடன் இடம்பெறும் கொலைகளைத் தடுத்துநிறுதத ஜனாதிபதி உடனடியாக உத்தரவிட வேண்டும் என மேலும் தெரிவித்தார்.


**கூட்டமைப்பின் இணைப்பாளரும் யாழ்.மாவட்ட எம்.பியுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்,**

யுத்தத்தை மீண்டும் விடுதலைப் புலிகள் ஆரம்பிப்பதற்காக அரசாங்கம் புலிகளுக்கு ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளைச் செய்துவருகின்றது. ஜே.வி.பியை சமாளித்து அரசாங்கத்



தின் ஆயுட்காலத்தை தக்கவைப்பதற்கு யுத்தத்தை ஆரம்பிப்பது தற்போதைக்குப் போதுமானது என்றும், அதனால் ஏற்படப்போகின்ற விளைவுகளைப் பின்னர் பார்த்துக்கொள்ளலாம் என அரசாங்கம் கருதுகின்றது.

அதுமாத்திரமல்ல யுத்தம் ஆரம்பிக்கப்பட்டால் புலிகளை பயங்கரவாதிகளாகச் சர்வதேச நாடுகளுக்குக் காண்பிப்பதற்கும் அது வசதியாக இருக்கும். அதனால்தான் புலிகளை



சீண்டிவிடுகினற வேலைகளை இராணுவம் செய்துவருகின்றது.

விடுதலைப்புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தொடர்ச்சியாகச் சுட்டுக்கொல்லப்பட்டும் புலிகள் பொறுமையாக இருப்பதைப் புலிகளின் பலவீனமாகக் கருதி கிழக்கு மாகாணத்தில் மேலும் பல வன்முறைகளுக்கு இராணுவம் தூபமிடுகின்றனர்.

யுத்தநிறுத்தத்தை தொடர்ந்து கடைப்பிடிக்கவேண்டும் என்பதே புலிகளின் நிலைப்பாடு. ஆனால் அரசாங்கம் யுத்தத்தை ஆரம்பித்து இலாபமதேட முற்படுமாக இருந்தால் அதன் விளைவுகள் பாரதூரமானதாக இருக்கும் என்பதைச் சொல்லிவைக்க விரும்புகின்றோம் எனத் தெரிவித்தார்.

**கூட்டமைப்பின் பிரதம கொறடாவும் வன்னி மாவட்ட எம்.பியுமான செல்வம் அடைக்கலநாதன் கருத்துத் தெரிவிக்கையில்,**

புலிகளின் பொறுமையை இனியும் சோதிக்கவேண்டாம் என அரசாங்கத்திடம் கேட்கின்றோம்.

யுத்தத்தை ஆரம்பித்தால்தான அரசாங்கத்தின் இருப்பைத் தக்க வைக்கமுடியும் என ஜனாதிபதி கருதுவாராக இருந்தால் அதனால் ஏற்படப் போகின்ற நஷ்டத்தையும் ஜனாதிபதியே ஏற்றுக்கொள்ளவேண்டும். அது உண்மையில் பாரிய விளைவாக இருக்கும். உண்மையில் யுத்தத்திற்கு நாம் தயாரில்லை. சமாதானப் பேச்சுவார்த்தைதான் நமது நோக்கம் என அரசாங்கம் நினைத்தால் கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தின் துணையோடு இடம்பெறுகின்ற படுகொலைகளை அரசாங்கம் நிறுத்தவேண்டும். இல்லையேல் அரசாங்கம் யுத்தத்திற்கு தயாராகின்றது என்றே தமிழ்மக்கள் கருதுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (க-4)

# தையல் பயிற்சி வகுப்புகள்

# இன்று ஆரம்பிக்கப்படும்

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க பிரிவினரால் நடாத்தப்பட்டுவரும் தையல் பயிற்சி நிலையத்தின் 2005 ஆம் ஆண்டுக்கான தையல் பயிற்சி பிரிவு இன்று புதன்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி வகுப்பு மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட 30 பேர் இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளவுள்ளனர்.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையைச் சேர்ந்த கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எச்.பீ.ஜீவரத்தினம் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார். (ப-35)

## கலந்துரையாடல்

(புங்குடுதீவு)

தீவக கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் 2005ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 11ஆம் துகதி காலை 9.30மணிக்கு வேலணை பெருங்குளம் மாரியம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி கலந்துகொள்ளவுள்ளார். (ப-126)

## வலம்புரிச் செய்திக்கு கைமேல் பலன்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு குறிகட்டுவான் குறுக்கு வீதி திருத்தப்பட்டும் 250m தூரமான வீதி குன்றும் குழியுமாக வாகனங்கள் செல்லமுடியாத நிலைமை காணப்பட்டது.

இது குறித்து வலம்புரிப் பத்திரிகையில் வெளியான செய்தியினையடுத்து இவ்வீதி புனரமைப்புச் செய்யப்பட்டு வருவதையிட்டு மக்கள வலம்புரிக்கு நன்றி தெரிவித்துள்ளனர். (ப-126)

## புலிகளூடாக நிதியுதவிகள் எதனையும் நாம் வழங்கவில்லை

# இறைமைமிக்க இலங்கை அரசுடனேயே உலகவங்கி தொடர்புகளை வைத்துள்ளது

## உலகவங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் விளக்கம்

(கொழும்பு)

**இறைமைமிக்க இலங்கை அரசாங்கத்துடனேயே நாம் நெருக்கமான தொடர்புகளை வைததிருக்கிறோம். இதனால் இலங்கை அரசாங்கத்துக்கு சவால் விடுக்கவோ அல்லது இடையுறு விளைவிக்கவோ நாம் முயற்சிக்கவில்லை என்று உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பீற்றர் ஹரோல்ட் தெரிவித்துள்ளார்.**

"சண்டேரைம்ஸ்" பத்திரிகையில் வெளியான செய்தி ஒன்றுக்கு பதிலளிக்கும் வகையில் பீற்றர் ஹரோல்ட் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடககு-கிழக்குப பிரதேசங்களில் உலக வங்கியின் உதவித்திட்டங்கள் செயற்படுத்தப் படும்போது விடுதலைப் புலிகளே பிரதான பங்காளிகளாக இருக்கவேண்டும் என்று சண்டேரைம்ஸில பீற்றர் ஹரோல்டை மேற்கோளகாட்டி செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

இலங்கைக்குள் விடுதலைப் புலிகளின கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்கள் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமை அதற்குக் காரணம் என்று அவா சுட்டிக்காட்டியிருந்ததாக அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் சில பிரதேசங்கள் உள்ள போதிலும் அவை இலங்கையினால் நிர்வகிக்கப்படும் உத்தியோக பூர்வ பிரதேசங்கள் என்றே நாம் கருதுகிறோம்.

இதன்காரணமாக உத்தியோகப்பற்றற்ற பிரதேசம் ஒன்றை ஏற்றுக்கொள்வதும் வடக்குக் கிழக்கில் உதவிகள் பகிர்ந்தளிக்கப்படும்போது விடுதலைப் புலிகளின் பிரதேசங்களை ஏற்றுக்கொள்வது என்பதும் ஒன்றுக்கொன்று வித்தியாசமான நடவடிக்கைகள்.

கடந்த அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையினை சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கமும் கடைப் பிடித்து வருகிறது.

இதன் அடிப்படையில் அரசாங்கம் உருவாக்கியுள்ள கொளகைத் திட்டத்துக்கு அமையவே உலகவங்கி செயறபடுகிறது. இதுவரைகாலமும் வடக்குக்கிழக்குப் பகுதிகளுக்கு அரசாங்க நிர்வாகத்தின் கண்காணிப்பின் ஊடாகவே உலக வங்கி உதவிகளை வழங்கி வருகின்றது. அது அரசின் உத்தியோகபூர்வ அமைப்பான வடக்கு-கிழக்கு மாகாணசபை மூலமே வழங்கப்படுகின்றது.

ஆனால் உலகவங்கி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி எதனையும் வழங்கவில்லை. இநதக் கொள்கையினை எந்த நோக்கத்துக்காகவும், எந்தக் காரணத்துக்காகவும் மாற்றும் நோக்கம் எதுவும் எமக்கு இல்லை எனவும் தெரிவித்த அவர்,

உலகவங்கி வடக்கு-கிழக்கு வீடமைப்புத் திட்டத்துக்கும், சுனாமியால் பாதிக்கப்பட்ட பலருக்கும் உதவியாக மேலும் 7 கோடி 50இலட்சம டொலர்களை சுனாமி அவசர மீட்புக்காக வழங்குவதற்கும் இணங்கியுள்ளது எனவும் தெரிவித்தார். (ப-4)

## சுனாமியால் வடக்கு- கிழக்கு மாகாணத்தில்

# சேதமான பாடசாலைகளை மீளமைக்க 6453 மில்லியன் ரூபா செலவிடப்படும்

சுனாமி அனர்த்தத்தினால் வடக்கு-கிழக்கு மாகாணஙகளில் சேதமடைந்த பாடசாலைகள் அனைத்தும் ஆறாயிரத்து 453 மில்லியன் ரூபா செலவில புனரமைக்கப்படவுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதியுதவியுடன இந்தப் பாடசாலைகள் புனரமைக்கப்படவுள்ளதாக கல்வியமைச்சின் சகலருக்குமான கல்விப்பிரிவின் தேசிய இணைப்பாளர் முத்துசிவஞானம தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின்கீழ வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 128 பாடசாலைகள் புனரமைக்கப்படவுள்ளன.

மடடக்களப்பில் 37பாடசாலைகள், அம்பாறையில் 40பாடசாலைகள், திருகோணமலையில் 26 பாடசாலைகள், முல்லைத்தீவில் 14 பாடசாலைகள், யாழ்ப்பாணத்தில் 11பாடசாலைகள் என்ற ரீதியில் இந்தத் திட்டத்தின்கீழ் புனரமைக்கப் படவுள்ளன.

இந்தப் பாடசாலைகளை நவீன வசதிகளுடன் புனரமைப்புச் செய்ய சர்வதேச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் முன் வந்துள்ளன.

இதேவேளை இவ்விரு மாகாணங்களிலும 62 பாடசாலைகள் கரையோரப்பகுதிகளில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டு பாதுகாப்பான இடங்களில் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதன்படி அம்பாறை மாவட்டத்தில் 28 பாடசாலைகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 11 பாடசாலைகளும், திருகோணமலை மற்றும் யாழ்ப்பாண மாவடடங்களிலும் தலா 10பாடசாலைகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் மூன்று பாடசாலைகளும் பாதுகாப்பான இடங்களில் புதிதாக நிர்மானிக் கப்படவுள்ளன. என அவா் மேலும் தெரிவித்தார். (ப-4)

## கலைநிகழ்வு

(மருதஙகேணி)

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் வெள்ளிக்கிழமை தோறும் நடாத்தப்பட்டுவரும் வாரந்த நிகழ்வின் தொடரில் வரும் வெள்ளிக்கிழமை 10.30மணிக்கு உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சி இடம்பெறும். (ப-35)

# லினாரஸ் செஸ்போட்டியில் ஆனந்திற்கு 2 ஆவது இடம்

லினாராஸ் சூப்பர் கிராண்ட் மாஸ்ட்ர்ஸ் செஸ் போட்டியின்



9-ஆவது சுற்றில் உஸ்பெகிஸ்தான் வீரர் ரஸ்தம் கசிம்ஷனோவை இந்தியாவின் விஸ்வநாதன் ஆன்நத் வென்றுள்ளார்.

இதன் மூலம் மொத்தம் 5.5 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்துக்கு அவா் முன்னேறியுள்ளா். ரஷிய வீரா் காரிகாஸ்பரோவ் 6.5புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

பல்கேரியாவின் வெஸ்லின் தபோலோவ்-ஹங்கேரியின் பீட்டர் லோகோ இடையேயான ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. இதையடுத்து தபோலோவ் மூன்றாமிடத்துக்குத் தள்ளபபட்டார். அவா் 5 புள்ளிகளைச் சேர்த்துள்ளார். லேகோ நான்காமிடத்தில் உள்ளார். இங்கிலாந்தின் மைக்கேல் அடம்ஸ்-ஸ்பெயினின் பிரான்சிஸ்கோ வல்லேஜோ ஆகியோரிடையேயான ஆட்டமும் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. அடம்ஸ் 5ஆவது இடத்தில் உள்ளார்.

இப்போட்டியில் இன்னும் மூனறு சுற்றுகளே மீதமிருக்கின்றன. இந்நிலையில் சம்பியனாகும் வாய்ப்பு காஸ்பரோவுக்குத்தான் அதிகம் என கருதப் படுகிறது. லினாரஸ் செஸ்பட்டத்தை ஏற்கனவே 8 முறை வென்றுள்ளார் காஸ்பரோவ். முதலாவது ஆட்டத்தில தபோலோவை வெனற ஆனந் அதற்குப்பிறகு தொடர்ச்சியாக 7 சுற்றுக்களிலும் வெற்றி தோல்வியற்ற நிலையே காணப்பட்டது. வென்றே தீரவேண்டிய கட்டாயத்தில் இருந்த ஆனந்துக்கு தற்போது ரஸ்தமுக்கு எதிரான வெற்றிபெரும் ஊக்கமளிப்பதாக அமைந்துள்ளது.

இந்த ஆட்டம் 38நகர்தல்களில் முடிவுக்கு வந்தது. ஒரு கட்டத்தில் ரஸ்தமுக்கு வெற்றி தோல்வியின்றி ஆட்டத்தை முடிக்கவாய்ப்பு கிடைத்தபோதும், தவறிழைத்ததால் தோல்வியை எதிர்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டார். தற்போது உலகத் தரவரிசையில் ஆன்நத் இரண்டாமிடத்தில இருப்பது குறிப்பிடத்தக்கது. (க-7)

விளையாட்டு செய்திகள்

# இந்திய அணி போதிய பயிற்சியுடனேயே உள்ளது

இந்திய அணிக்கு பயிற்சி போதாததால் பாகிஸ்தானுககு எதிரான தொடரில் அது வெற்றி பெறுவது கஷ்டமென பலரும கருத்துத் தெரிவித்துள்ளபோதும், இந்திய வீரர்கள் நல்ல பயிற்சியிலேயே இருக்கிறார்கள் எனக் கூறியிருக்கிறார் இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரா் வீரேந்தர் ஷெவாக்.

அணமைக்காலங்களில் பெரிய அணிகளுடன் விளையாடாத போதும் பல உளளூர் போட்டிகளில் விளையாடிய அனுபவமே நல்ல பயிற்சியாக உள்ளது.

தொடகக ஆட்டக்காரராக என்னுடன் கெளதம் காம்பீர் விளையாடுகிறார். அவரது இடத்தை அவா் தக்கவைத்துக்கொள்ள வேண்டும்.

முதல் டெஸ்ட் போட்டி நடைபெறும் மொகாலி மைதானத்தில் 1999ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் போட்டியிலேயே நான் அறிமுகமானேன். அப்போட்டியில் ஒரு ஓட்டத்தை மட்டுமே என்னால் எடுக்கமுடிந்தது. ஆனால் 2003இல நியூசிலாந்துக்கு எதிரான போட்




டியில் சதமடித்தேன் அதேபோல் பாகிஸ்தானுக்கு எதிரான இத்தொடரிலும் நிறைய ஓட்டங்களைக் குவிக்க முயற்சிப்பேன் என்றார் ஷெவாக். (க-7)

# அவ்ரிடியை மொய்க்கும் ரசிகைகள்

பாகிஸ்தான் கிரிக்கெற் வீரா் சயிட் அவ்ரிடி எங்கு சென்றாலும் ரசிகைகள் அவரை மொய்ப்பது வழக்கம். இவரது அழகு, அதிரடியான ஆட்டத்தில் மயங்கி விடுவா் ரசிகைகள். இமை தா்மசாலா விலும் காணமுடிந்தது. இந்தியா சென்ற பாகிஸ்தான் அணி தர்மசாலாவில் நடந்த 3 நாள் போட்டியில் விளையாடியது. அவ்ரிடி பயிற்சியில் ஈடுபட்டு இருந்தபோது ஏராளமான ரசிகைகள் இவரது ஆட்டத்தை ஆர்வத்துடன் கண்டு ரசித்தனர். இவரிடம் பெண்களை கவரும ரகசியம் குறித்து கேட்டதற்கு கொஞ்சம் அழகாக இருந்தால உங்கள்மீது ஆர்வம் ஏற்படும். இதில் அவுஸ்திரேலியா, இந்தியா, இங்கிலாந்து என்ற வித்தியாசம் இல்லை. பாகிஸ்தான் கலாசாரம் வேறு மாதிரி உளளது. பெண் ரசிகைகள் தொடர்பாக நிறைய அனுபவங்கள் எனக்கு உண்டு.

ஆனாலும் திருமணமாகி இரண்டு குழந்தைகள் பிறந்து விட்டதால் அவற்றை எலலாம் சொல்லமுடியாது. இந்தியப் பயணத்தை பொறுத்தவரை 1999இல் சென்னையில் சதம் அடித்து அணிக்கு வெற்றி தேடித் தந்ததை மறக்கமுடியாது. இம் முறையும் சிறப்பாக செயல்படமுடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. வாய்ப்பு அளித்தால திறமையை நிரூபிப்பேன் என்று பதில் அளித்தார் அப்ரிடி. (ந-7)




இங்கிலாந்து கிரிக்கெற் வீரர் அன்ரூ பிளின்ரொப்புக்கு அண்மையில் திருமணம் நடைபெற்றது. திருமண வரவேற்பு வைபவத்தின் போது பிளின்ரொப் தனது இளம் மனைவியுடன்.

# மீள்பார்வை

## பிரியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

## (தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 2



### சபாநாயகரின் தீர்ப்புகள்

மரபுகளைப் பிரயோகிப்பதில் தன்னும் குறைபாடொன்று இருக்குமாயின் தீர்ப்பொன்றை வழங்குவதன் மூலம் ஆக்க பூர்வமான ஒரு பங்கை வகிக்க வேண்டியது சபாநாயகரின் கடமை. சபாநாயகர் அவரின் கடமைகளை நிறைவேற்றும் போது பாராளுமன்ற நடைமுறைகள் தொடர்பில் மட்டுமன்றி அரசியலமைப்பு ரீதியான விடயங்களிலும் சட்டஞ் சார்ந்த விடயங்களிலும் நடைமுறைப் பிரச்சினைகளிலும் தீர்ப்புகள் வழங்கவேண்டிய தேவையேற்படுகின்றது. எனினும் சபாநாயகர் இயன்றவரை நடைமுறையிலுள்ள விதிகளையும் வழக்கங்களையும் நெருக்கமாகப் பின்பற்றுகின்ற தீர்வுகளுக்குத் தம்மைக்கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

சபாநாயகரின் தீர்ப்பு ஒரு போதும் நிலையியற் கட்டளைகளை மீறுவதாக அல்லது அவற்றுக்கு முரண்பட்டதாக இருத்தலாகாது. சபையின் ஏகமனதான தீர்மானத்தின் பேரில் தன்னும் நிலையியற் கட்டளைகளைச் சபை மீறுவதானது முற்றிலும் ஒழுங்கற்றதாகும் அத்தகைய நடவடிக்கை எதிர்காலத்தைப் பொறுத்தவரையில் எவ்வித அதிகாரப் பெறுமானமும் அற்றது. சபாநாயகரின் தீர்ப்பொன்றுக்குக் கொடுக்கப்படும் நடைமுறை ரீதியான அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் தொடர்கின்ற வழக்கத்திலும் தங்கியுள்ளது தலைமை தாங்குபவர் தமக்கு முன் அப்பதவியிலிருந்தவர்களின் தீர்ப்புகளினால் வெறுமனே வழிப்படுத்தப்படுகின்றார் குறிப்பிட்ட தீர்ப்பு எதனையும் அது வழங்கப்பட்ட சூழ்நிலைகளுக்கேற்ப பின்பற்றுவதற்கான சுதந்திரம் அவருக்கிருக்கின்றது தீர்ப்பொன்றைச் செல்லுபடியான ஒரு முன்நிகழ்வாகக் கருதுதலை நியாயப்படுத்துவதற்கான திட்டவட்டமான அல்லது தெளிவான விதிமுறை எதுவுமில்லை. தீர்ப்பொன்றைத் தொடர்ந்து பின்பற்றுவதானது நிச்சயமாக அவ்வகையாகக் கருதத்தூண்டும் தீர்ப்புகளை வழங்குவதில் சபாநாயகரின் அதிகாரம் மிகப் பரந்ததென்பதுடன் மிக அரிதாகவே அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும் படுகின்றது.

சபாநாயகரால் பிரயோகிக்கப்படும் அதிகாரம் விதிகளில் தங்கியுள்ளதை விட கூடுதலாக வழக்காற்றிலும் சம்பிரதாயத்திலும் தங்கியுள்ளதென ஒப்புக்கொள்ளப்படுகின்றது. சபாநாயகர் நடுநிலை தவறாதவராகவும் சபையின் விதிகளின் பாதுகாவலராகவும் செயற்படவேண்டுமென வழக்காறும் சம்பிரதாயமும் தேவைப்படுத்துகின்றன.

பாராளுமன்றச் சிறப்புரிமைகள் பற்றிய சட்டத்தின் கீழ் பாராளுமன்ற நடவடிக்கைகளின் செல்லுபடியாகும் நிலை நடைமுறை ஒழுங்கீனத்தின் அடிப்படையில் நீதிமன்றம் எதனிலும் கேள்விக்குட்படுத்தப்படலாகாதென்பதுடன் சபையின் முன்னருள்ள நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்குச் சபநாயகருக்கு அல்லது தலைமைதாங்கும் அலுவலருக்கு உள்ள உரிமையையும் நீதிமுறை மீளாய்வுக்கு உட்படுத்தப்படக்கூடாது. இக்கோட்பாடு எந்தவொரு ஜனநாயகத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வழக்கமென்பதுடன் அது சரியான நடைமுறை பின்பற்றப்படுதலை உறுதிப்படுத்தவேண்டுமென்ற பெருஞ்சுமையையும் சபாநாயகர் மீது சுமத்துகின்றது.

## அத்தியாயம்II

### பாராளுமன்றக் கூட்டத்தொடர்கள்

பாராளுமன்றத்தின் ஒரு கூட்டத்தொடரென்பது அமர்வுநிறுத்தங்கள் இரண்டுக்கு இடைப்பட்ட அல்லது அமர்வுநிறுத்தமொன்றுக்கும் கலைப்பொன்றுக்கும் இடைப்பட்ட காலமாகும். கூட்டத்தொடர்களின் காலநீட்சி எல்லை வரையறுக்கப்படாதது. சில கூட்டத்தொடர்கள் அனேக ஆண்டுகள் தொடர்ந்தபோதிலும் வேறு சில மிகக் குறுகிய காலமான பத்து நாட்கள் மட்டும் நீடித்துள்ளன. பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படும் அலுவல்கள் எல்லாம் கூட்டத்தொடர்களின் போது செய்யப்படுகின்றன கூட்டத்தொடரென்றின்போது பாராளுமன்றம் நிலையியற் கட்டளைகளில் குறித்துரைக்கப்பட்ட நாட்களில் கூடவேண்டுமென எதிர்பார்க்கப் படுகிள்றது. எனினும் சபையின் தீர்மான மொன்றினால் அது வேறுநாட்களில் கூடலாம் அல்லது உரிய தேதியில் கூடாது விடலாம் நிலையியற் கட்டளை 7 இன் கீழ் கூட்டத்தொடரின் போது பாராளுமன்றம் ஒவ்வொரு மாதத்தினதும் முதலாம் மூன்றாம் வாரங்களில் செவ்வாய்க்கிழமை புதன்கிழமை.வியாழக்கிழமை.வெள்ளிக்கிழமை ஆகிய எட்டு நாட்கள் கூடவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனவே இதற்கு முரணான தீர்மானமொன்று இருந்தாலன்றி பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படும் வேளையில் அடுத்த நிலையியற் கட்டளை நாளில் கூடுவதற்கு அழைக்கப்பட்டதாயிருக்கின்றது. ஆண்டின் தொடக்கத்தில் கூட்ட நாட்களைளக் குறிப்பிடுகின்ற பஞ்சாங்கமொன்று வழங்கப்படுகின்றது. நிலையியற் கட்டளைகள் வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்ட மூல விவாதத்துக்கான வெவ்வேறு கூட்ட நாட்களையும் குறித்துரைக்கின்றன. (நிதி நடைமுறையைப் பார்க்கவும்)

### *பாராளுமன்றத்தைக் கூடுமாறு அழைத்தல்*

அரசியலமைப்பின் 70 (1) ஆம் உறுப்புரையின் கீழ் ஜனாதிபதி காலத்துக்காலம் பாராளுமன்றத்தைக் கூடுமாறு அழைக்கலாம் அமர்வு நிறுத்தலாம். அத்துடன் கலைக்கலாம். ஒவ்வொரு கூட்டத்தொடரின் ஆரம்பத்திலும் அரசாங்கக்கொள்கை பற்றிய கூற்றொன்றை விடுக்கவும் பாராளுமன்றத்தின் சம்பிரதாய யுர்வ அமர்வுகளுக்குத் தலைமை தாங்கவும் அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதிக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட ஒரு பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தில் முதலாவது அலுவல் விடயம் சபாநாயகர் தெரிவு செய்யப்படுவதாக இருக்குமென்பதனால் ஜனாதிபதி வழமையாக இக்கூட்டத்துக்குச் சமூகமளிக்கமாட்டார் எனினும் மரபின்படி எனைய ஒவ்வொரு கூட்டத்தொடரின் ஆரம்பத்திலும் ஜனாதிபதி அரசாங்கக் கொள்கை பற்றிய கூற்றொன்றை விடுத்துப் பாராளுமன்றத்தில் உரையாற்றுவார். பாராளுமன்றத்தில் செவிமடுக்கப்படுவதற்கும் பாராளுமன்றத்தில் கலந்து கொள்வதற்கும் அதில் உரையாற்றுவதற்கும் அதற்குச் செய்திகள் விடுப்பதற்கும் ஜனாதிபதிக்கு உரிமையுண்டு கடந்த காலத்தில் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட உரையை ஆற்றியுள்ளதுடன் அரசியலமைப்பு வரைவொன்றையும் சமர்ப்பித்துள்ளார்.

கூட்டத்தொடரொன்றின் தொடக்கத்தில் சமர்ப்பிக்கப்படும் அரசாங்கக் கொள்கை பற்றிய கூற்று விவாதிக்கப்படலாம். அரசாங்கக் கொள்கை பற்றிய கூற்றுப் பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டால் அமைச்சரவை கலைக்கப்பட்டதாயிருப்பதற்கும் 49(2) ஆம் உறுப்புரையில் திட்டவட்டமான ஏற்பாடு உள்ளது எனினும் பொதுத்தேர்தலைத்தொடர்ந்து வரும் முதலாவது கூட்டத்தொடரின் தொடக்கத்தின் போது அரசாங்கக்கொள்கைக் கூற்று நிராகரிக்கப்படுவதன் பேரின் பாராளுமன்றம் கலைக்கப்படுதலை உறுப்புரை 70 (1) (ஆ) தடுக்கிக்கின்றது. எனவே அடுத்துவரும் கூட்டத்தொடர் ஒள்றின் தொடக்கத்தில் கொள்கைக் கூற்று நிராகரிக்கப்பட்டால் பாராளுமன்றம் கலைக்கப்படலாம் என ஊகிக்கலாம். ஒவ்வோராண்டும் குறைந்தபட்சம் ஒரு தடவையாதல் பாராளுமன்றம் கூடும்படி அழைக்கப்படவேண்டும் கலைப்பொன்றை அல்லது அமர்வு நிறுத்தமொன்றைத் தொடர்ந்து ஜனாதிபதி அதனைச் செய்கின்றார்.

### *கலைப்பு*

கலைப்பொன்று பாராளுமன்றம் உளதாயிருத்தலை முடிவுறுத்துகின்றது. பாராளுமன்றம் கலைக்கப்படுவதன் பேரில் அத்தேதியில் முடிவுசெய்யப்படாது பாராளுமன்றத்தின் முன்னருள்ள எல்லாவிடயங்களும் காலாவதியாகின்றன சட்டம் செயற்படுவதன் மூலம் ஜனாதிபதியின் பிரகடனத்தின் மூலம் அல்லது பாராளுமன்றத் தீர்மானத்தின் மூலம் பாராளுமன்றம் கலைக்கப்படலாம் பாராளுமன்றம் அதன் முதலவாது கூட்டத்துக்கு நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறாண்டு கால முடிவில் சட்டம் செயற்படுவதன் மூலம் கலைக்கப்பட்டதாயிருக்கின்றது. பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலம் தவிர பாராளுமன்றத்தின் பதவிக்கலாம் நீடிக்கப்பட முடியாது அத்தகைய ஒரு சட்டம் அரசியலமைப்புக்கு ஒரு பிரதான திருத்தமாக இருக்குமென்பதனால் அது பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் (சமூகமளிக்காதோர் உட்பட) மூன்றில் இரண்டு பங்குக்குறையாத பெரும்பான்மையால் நிறைவேற்றப்படவேண்டுமென்பதுடன் மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படவும் வேண்டும் அதற்கினங்க முதலாவது பாராளுமன்றத்தின் சீவிய காலத்தை நீடிப்பதற்கு அரசியலமைப்புக்கான 4வது திருத்தம் பயன்படுத்தப்பட்டது அத்திருத்தம் பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்பட்டு மக்கள் தீர்ப்பொன்றில் மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றது. அத்தகைய ஒரு சட்டம் 80(2) ஆம் உறுப்புரையின் கீழ் ஜனாதிபதியால் சான்றுப்படுத்தப்படவேண்டும் எனினும் சட்டத்தின் கீழ் மக்கள் தீர்ப்பை ஆட்சேபிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுளள காலம் முடியும் வரைக்கும் அத்துடன் அவ்வாறு ஆட்சேபிக்கப்பட்டால் உயர் நீதிமன்றம் அதன் தீர்ப்பை வழங்கும் வரைக்கும் அத்தகைய சான்றிதழ் வழங்கப்படக்கூடாது உயர் நீதிமன்றம் ஆறுமாத காலத்தினுள் அதன் தீர்ப்பை வழங்கவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றது.

(தொடரும்)

# கடந்த இரண்டு மாதங்களுள் 523 சிறுவர் துஸ்பிரயோகம்

## சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தகவல்

(கொழும்பு)

கடந்த இரண்டு மாதகாலப்பகுதிக்குள் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான 523 முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதற்கான சட்டநடவடிக்கைகள் எடுக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர டி சில்வா தெரிவத்துள்ளார். இந்த 523 முறைப்பாடுகளும் கடந்த வருட இறுதியில் நடைபெற்ற சம்பவங்களுடன் தொடர்புபட்டவையென அவர் குறிப்பிட்டர்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக எடுக்க வேண்டிய செயற்பாடுகள் குறித்து மக்கள் அறிந்திருக்கிறமையே இவ்வாறான முறைப்பாடுகள் கிடைப்பதற்கு காரணமாக அமைந்தது எனவும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சுட்டிக்காட்டுகின்றார்.

சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்துள்ளதா என்பது குறித்து ஆராய்ந்து பார்ப்பதற்காக எதி வரும சில தினங்களுள் விசேட ஆய்வொன்றை மேற் கொள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை எதிர்பார்த்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ப-4)

# நிவாரண சேவைகள் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப் படுகின்றது

## நிதி அமைச்சர் சரத் அமுனுகம

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரண நடவடிக்கைகள் சீர்குலைந்துள்ளதாக கூறப்பட்ட கருத்துககள் உண்மைகுப் புறம்பானவையென நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நிவாரண சேவைகள் மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படடுள்ளதாக சுட்டிக்காட்டிய அவர் இடம்பெயர்ந்தவர்களுக்கான போதுமான உணவு, மருந்து மற்றும் இருப்பிடங்களை வழங்குவதற்கு அரசாங்கம் நட வடிக்கை எடுத்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

சுனாமி ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அரச சார்பற்ற அமைப்புக்களுடன் கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுனாமி பேரரையால் பாதிப்புற்ற பிரதேசங்களை புனரமைக்கும் நடவடிக்கைகள யாவும் முடிவுறும் கட்டத்தில் உள்ளது. நிவாரண விநியோகத் திட்டம் வெற்றிகரமாக முடிவடைந்தது. எனினும் சுனாமி அனர்த்தத்தின் பின்னர் முதல் இரண்டு வாரங்களில் நிவாரண நடவடிக்கைகள் வெற்றிகரமாக நடைபெறமாட்டது என பலர் நினைத்தனர் இதனால் தொற்று நோய்கள் பரவுதல் உணவு மற்றும் மருந்துப்பற்றாக்குறை ஏற்படும் எனவும் சிலர் நினைத்தனர்.

அதேபோல் இடம்பெயர்ந்தவர்களுக்கு இருப்பிடங்களை வழங்க முடியாது போகும் என்ற பயமும் அவர்களிடம் இருந்தது.ஆனால் தற்போது அரசு அவர்களுக்கு இருப்பிடங்களை அமைத்துககொடுக்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

அத்துடன் நிவாரணம் வழங்கும் நடவ்டிக்கைகளை திறந்த மட்டத்தில் நிறைவேற்றியுள்ளோம். இது அரசாங்கத்தினதும் அரச சார்பற்ற அமைப்பினதும் சிறந்த நடவடிக்கைகளாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (க-4)

## சுனாமி அனர்த்தத்தால்

# பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

சுனாமி இயற்கை அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட உயர் கல்வி மாணவர்களுக்காக சர்வதேச மாணவர் பேரவையின் ஆதரவில் டபிள்யூ. யூ.எஸ.சி. நிறுவனமானது றீடோ நிறுவனத்துடன் இணைந்து தெரிவு செய்யப் பட்ட முதல் 50 மாணவர்களுக்குரிய உதவிக்கொடுப்பனவுகளை கடந்த 4ஆம் திகதி வழங்கப்பட இருந்தது.

அன்றைய தினம் எமது அலுவலகம் மீது ஸ்ரீலங்கா இராணுவமும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட அராஜக நடவடிக்கையின் காரணமாக அது நடைபெறவில்லை.

இந்நிகழ்வானது வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் யாழ். பல்கலைக்கழக நூலகக்கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது. எனவே தெரிவு செய்யப்பட்ட 50 மாணவர்களையும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு உதவிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுவதோடு இதுவரை பெயர் விபரங்களை உறுதிப்படுத்தாதவர்கள் தங்களது பெயர் விபரங்களை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ப)

# முஸ்லிம்களின் கொலையை கண்டித்து ஒலுவில் பிரதேசத்தில் ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

வெலிகந்த கொலகனாவாடிய பிரதேசத்தில் முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத்தெரிவித்து நேற்று முன்தினம் ஒலிவில் பிரதேசத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்ஆர்ப்பாட்டத்தை தென்கிழக்குப் பல்கலைக்கழக சமுகம் மேற்கொண்டிருந்தது இதில் நூற்றுக்காணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

இவஆர்ப்பாட்டம் அமைதியான முறையில் நடைபெற்றதாக அக்கரைப்பற்றுபொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி எம்.எம்.சிறிபால தெரிவித்தார். (ச)

# ரூ. 2 1/2 கோடி மாணிக்கக்கற்கள் பிடிபட்டன

(கொழும்பு)

இரண்டரை கோடி ரூபா பெறுமதியான மாணிக்க கற்களை இலங்கைக்குள் கடத்த முயன்ற ஒருவரை கட்டுநாயக்க சுங்கப் பிரிவினர் நேற்று முன்தினம் அதிகாலை கைதுசெய்துள்ளன.

தாய்லாந்திலிருந்து இந்த மாணிக்க கற்கள் கடத்தி வரப்பட்டதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மொரட்டுவைப் பகுதியைச் சேர்ந்தவர் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# திருவள்ளுவர் கடவுள் வாழ்த்துப் பாடினாரா?

திருக்குறளில் சமயவாதிகள் கூறும் கடவுள், இந்து, பிரார்த்தனை, தியானம், அர்ச்சனை, அபிசேகம், தீர்த்தம், யாத்திரை, பக்தி, பாவம், புண்ணியம், மோட்சம், பிராமணன், சூத்திரன், சாதி, இவைபற்றி எதுவுமே சொல்லப்படவில்லை! இந்தச் சொற்களே திருக்குறளில் இல்லை! தருவள்ளுவர் சமயவாதிகளைப் பினபற்றி அறநெறிகளைக் கூறவில்லை. நாம் வாழும் இந்த உலகத்தோடு ஒட்டி வாழ்வாங்கு வாழ்வதற்குரிய அறநெறிகள் பற்றயும், பொருள் பற்றியும், இன்பம் பற்றியும் மட்டுமே அறிவுரை சொல்கிறார்.

திருக்குறளில் உள்ள பொருட்சொல் இன்று பொருள்இயல் (**Economics**) வணிகவியல் (**Commerce**) முகாமைத்துவம் (**Managaement**) ஆளுமையியல் (**Administration**) அரசியல் (**Politics**) ஆட்சியியல் (**Political Science**) ஆகிய சமுதாயக் கலைகளை உள்ளடக்கி உள்ளது. அதாவது அன்று பொருள் என்ற ஒரே சொல்லில் சொல்லப்பட்ட இயலில் இருந்து இவ்வியல்கள் பிரிந்தன.

கிரேக்கத்திலும் பல இயல்கள் தத்துவம் என்ற ஒரே சொல்லில் அடக்கப்பட்டன. அவற்றை எடுத்துச் சொன்ன அறிஞர்கள் தத்துவவாதிகள் என்ற ஒரே சொல்லால் குறிக்கப்பட்டனர். திருவள்ளுவர் அறிவியலுக்கே முதலிடம் கொடுக்கிறார். எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்பொருள் காண்பது அறிவு எனத் தமிழில் பகுத்தறிவுக்கு இலக்கணம் சொல்லிய முதல் புலவர் அவர்தான்.

அதற்கு முன்னர் கௌதம புத்தர் (கிமு 563-483) அவ்வாறான கருத்தை வெளியிட்டுள்ளார். மற்ற ஆதாரங்கள் பழக்கவழக்கங்கள் என்பவைகள் எப்படியிருந்தாலும் உன் அறிவைப் பயன்படுத்திக் கொள்! எந்தச் செயலையும் பட்டறிவின்படி ஆராய்ந்து பார்! முன்னாள் பழக்க வழக்கங்கள், பெரியவர்கள் மனிதத்தன்மைக்கு மேற்பட்டவர்கள் சொன்னது, நீண்ட நாளாக இருந்துவருவது என்பதற்காக எதையும் எடுத்துக் கொள்ளாதே எனப் புத்தர் தனது சீடர்களுக்கு அறிவுறுத்தினார்.

கிரேக்க தத்துவவாதியான சோக்கிரடீஸ் (கிமு.469-399) எதனையும் கேள்விகளை எழுப்பி நுணுக்கமாக ஆராய்ந்து சான்றுகளின் அடிப்படையில் உணமையை அறிந்து கொள். அதிகாரத்தைக் கையில் வைத்துக் கொண்டு உயர்ந்த இடத்தில் இருப்பவர்கள் சொல்கிறார்களே எனபதற்காக எதையும் உண்மை என்று எடுத்துக்கொள்ள வேண்டாம். காரணம் அப்படிப்பட்டவர்கள் குழப்பவாதிகளாகவும் பகுத்தறிவு அற்றவர்களாகவும் இருக்கக்கூடும் என்றார்.

கடவுள் பற்றிய ஆராய்ச்சியில் இறங்காத தத்துவ வாதிகள் புத்தர், மகாவீரர் (கிமு 540-468) ஆகிய இருவரே! ஏனையோர் ஆராய்ச்சி செய்வதன் மூலம் நித்தியப் பொருளை அறிந்து நிரூபிக்க முயன்றனர். ஆராய்ச்சி எதுவுமின்றி நம்பிக்கையின் அடிப்படையில் மட்டும் பரம்பொருளை உணர்ந்தவர்கள் பக்தி நெறியை மேற்கொண்டனர். பக்திநெறி பாமர மக்களுக்காக உருவாக்கப்பட்ட நெறியாகும்.

புத்தர், மகாவீரர் இருவரது கோட்பாடுகள் திருவள்ளுவர் மீது செல்வாக்குச் செலுத்தி இருக்கும் என எண்ணுவதில் தவறில்லை. புத்தரின் கருத்தையொட்டி எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும், அப்பொருள மெய்பொருள் காண்பது அறிவு என மெய்யுணர்த்தல் (36) என்ற அதிகாரத்தில் வரும் குறள் (355) மூலம் திருவள்ளுவர் கூறியிருயிக்கிறார். எந்தப் பொருள் எத்தன்மை உடையதாகத் தோன்றினாலும் அத்தோற்றத்தின் படியே கண்டறியாமல் அப்பொருளினுள் நின்று உண்மையாகிய பொருளைக் காண்பதே அறிவாகும்.

மேலும், அறிவுடமை (43) என்ற அதிகாரத்தில் எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும், அப் பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்ற குறள் (423) மூலம் சொல்கிறார். எந்த ஒரு பொருளைப் பற்றியும் யார் யார் சொல்லக் கேட்டாலும் அப்பொருளினுடைய உணமையைக் காண்பதே அறிவாகும்.

அறிவுடையார் எல்லாம் உடையார், அறிவிலார் என்னுடையரேனும் இலர் என்ற குறளும் (430) அறிவுடமை என்ற அதிகாரத்தில்தான் (43) வருகிறது. அறிவுடமை என்றால் கல்வி கேள்வி இரண்டாலும் வருகிற அறிவோடு உண்மை அறிவைத் தெரிந்து கொள்ளல். இந்த உண்மை அறிவை எல்லோரும், குறிப்பாக இளைய தலைமுறையினர் தேடவேண்டும். உண்மை அறிவு கைகூடினால் எதையும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

திருவள்ளுவர் பகுத்தறிவை வற்புறுத்தியதன் விளைவாகவே திருக்குறள் இந்து சமயத்தவர்களால் இருட்டடிப்புச் செய்யப்பட்டு வந்துள்ளது. சமய சேற்றில் புதைந்துபோன சேரர், சோழர், பாண்டியர், பல்லவர், ஆரியச் சக்கரவர்த்திகள் அதனைப் போற்றாது விட்டார்கள். நாம் பெருமை பேசும் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் சதுர்வேதி மங்கலங்கள், எண்ணாயிரம், திருபுவனை போன்ற ஊர்களை இறையிலி நிலங்களாக நிவந்தம் செய்தும் வேதம் படிக்க வேத பாடசாலைகள் நிறுவியும் அந்தணர்கள் தாள் பணிந்து ஆண்டனரே தவிர அவர்கள் தமிழ்ப் பள்ளிகள் நிறுவி திருக்குறள் சொல்லிக் கொடுத்தார்கள் என்று வரலாறு இல்லை.

அவர்களது அரசாட்சியில் மனு, மிடாக்சாரம், மோத்ரி, ஜுமுக வாதனா எழுதிய தயாபாக (தர்மரத்னா என்ற நீதி நூலின் ஒரு பகுதி) ஆகிய நான்கு சாத்திரங்களின்மேல் சோழர்களுடைய நீதி நிர்வாகத்தின் அடித்தளம் அமைக்கப்பட்டது. அர்த்த சாத்திரம் அரசியல் நூல் என்ற அளவில் ஸ்மிருதிகளின் நீதியினின்று ஒரு சிறிது மாறுபட்டுக் காணப்பட்டது. இவ்வாறாக அரசியல் தத்துவத்திற்கு அர்த்தசாத்திரமும்; நீதித்தத்துவத்திற்கு மேற்சொன்ன நான்கு சாத்திரங்களும் சோழர் காலத்து அந்தணர்களால் ஊர் நீதிமன்றங்களிலும் அரச நீதி வழங்கு மன்றங்களிலும் எடுத்து ஓதப்பட்டு விளக்கவுரை சொல்லப்பட்டன என்று சோழர்களின் அரசியல், கலாச்சார வரலாறு பாகம் 2 எனும் நூலில் வரலாற்றாசிரியர் மா. பாலசுப்பிரமணியன் குறித்துள்ளார்.

இதிகாச நூல்களான பாரதம், இராமாயணம், கந்தபுராணம், பெரியபுராணம், பகவத் கீதை போன்ற நூல்களுக்குக் கொடுக்கப்பட்ட பெருமையில் நூற்றில் ஒரு பங்கு கூட அரசர்கள் மற்றும சமயவாதிகளால் திருக்குறளுக்குக் கொடுக்கப்படவில்லை. இது ஓர் கசப்பான உண்மை.

திருவள்ளுவர் ஆதி என்ற புலைச்சிக்கும் பகவன் என்ற பார்ப்பனனுக்கும் பிறந்தவர் என்று கதை எழுதி வைத்திருக்கிறார்கள். இந்தக் கதை வள்ளுவரை இழிவு படுத்த இட்டுக்கட்டி எழுதப்பட்ட புணைந்துரை. வரலாறு என்ற பெயரில் எழுதப்பட்ட கற்பனைக் கதை. அப்படிக் கதை புனைந்ததின் நோக்கம் கல்வி பார்ப்பனனுக்கு மட்டும் சொந்தமானது. பார்ப்பனன் மட்டுமே அறிவாளி, பறைச்சி வயிற்றில் அறிவாளியான பிள்ளை பிறந்திருக்க முடியாது. பிறந்திருந்தால் பார்ப்பன விந்து சம்பந்தம் ஏதாவது இருந்திருக்க வேண்டும் என்பதை நிலை நாட்டவே தங்களை உயர் சாதியினர், பூதேவர்கள் என்று சொல்லிக்கொண்டவர்கள் அந்தக் காலத்தில் அப்படி எழுதி வைத்துள்ளார்கள். திருவள்ளுவர் ஏனைய புலவர்களைப் போல கடவுள் வாழ்த்துப் பாடியிருக்கிறாரே என்று சிலர் கேட்கலாம்.

கடவுள் என்ற சொல் திருககுறளின் முதல் அதிகாரத்திற்கு கொடுக்கப்பட்ட தலைப்பில் மட்டுமே காணப்படுகிறது. திருக்குறள் அதிகாரங்களுக்கு அந்த அதிகாரத்தில் காணப்படும் சொற்களைக் கொண்டே தலைப்புக் குறிக்கப்படுவது பெருவழக்காகக் காணப்படுகிறது. திருக்குறள் 5வது அதிகாரத் தலைப்பு புதல்வரைப் பெறுதல் என்பது தவறானதாகும். மக்கள் பற்றிய ஆரியர்களது கருத்தினை வலிந்து புகுததவே பிற்காலத்தவர் அவ்வாறு தலைப்பிட்டுள்ளார்கள். புதல்வரைப் பெறுதல் என்ற சொல் அந்த அதிகாரத்தில் வரும் 10 குறள் ஒன்றிலேனும் இடம்பெறவில்லை. மக்கட் பேறு என்று இருப்பதே பொருத்தமானது. அதுவே வள்ளுவரது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தி நிற்கும் சொற்களாகும். இந்த அதிகாரத்தில் வரும் முதற் குறிளிலேயே வள்ளுவர் பெறுமவற்றுள் யாமறிவது இல்லை, அறிவிறிந்த மக்கட் பேறு அல்ல பிற எனத் தெளிவாகக் குறிப்பிடுகிறார். பேறு என்றால் செல்வம் என்று பொருள. தற்கால உரை ஆசிரியர்கள் புதல்வரைப் பெறுதல் என்பதற்குப் பதில் மக்கட் பேறு என்றே தலைப்பிட்டுள்ளார்கள்.

எனவே கடவுள் வாழ்த்து என்ற அதிகாரத் தலைப்பு இடைச் செருக்கலாக இருக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால் வ. உ. சிதம்பரனார் போன்ற தமிழ் அறிஞர் திருக்குறளில் உள்ள முதல் மூன்று அதிகாரங்களும் இடைச்செருகல் என வாதிடுகிறார்.

திருக்குறளில் 133 அதிகாரங்கள் உள்ளன. அதில் இந்த 3 அதிகாரங்களையும் நீக்கி விட்டு 130 அதிகாரங்களை வைத்துக கொண்டால் போதுமானது என்கிறார். வ.உ.சி. தம் கோள் நிறுவப் பல தர்க்க நெறிப்பட்ட கருத்துக்களை முன்வைக்கிறார்.

1) துறவறவியலில் மெய்யுணர்தல் வருகிறது. அப்படியாயின் பாயிரத்தில் வரும் நீத்தார் பெருமை தேவையா? மிகை எனக் கொள்ள வேண்டும்.

2) வான் சிறப்பு வழிபாட்டு நோக்கமுடையதன்று.

3) மூன்று அதிகாரத்துள்ளும் ஏனையவை போலச் சொற்சுவை பொருட்சுவை உடையன அல்ல. அவை வெள்ளைப பாக்கள்.

4) கடவுள் வாழ்த்துக் கூறுவது பிற்கால வழக்கு. கடவுள் வாழ்த்தில் கடவுள் பற்றிய இலக்கணத்திற்கும் மெய்யுணர்தலில் வரும் இறை இலக்கணத்திற்கும் கருத்துப் பொருத்தம் இல்லை. பரிமேலழகர் தனது கற்பனைத் திறத்தாலேயே பொருத்தம் கண்டுள்ளார்.

5) கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் வரும் முதல் குறளில் இடம்பெற்றுள்ள ஆதி பகவன் இரண்டும் வடமொழிச் சொற்கள். ஒப்புயர்வற்றதொரு நூலைத் தமிழ் மொழியில் சொல்லப் புகுந்த தமிழ்ப் புலவனான தமிழ்மகன் ஒருவன் தன் நூலில் முதற்பாவின் கண்ணே ஆரியச் சொற்கள் இரண்டைப் புகுத்தானென்றல் சைவ சமயத்தைப் போதிக்கப புகுந்த சைவ ஒழுக்கமுடைய சைவ மகனொருவன் புலால் உண்பதை ஒத்ததாகும்.

6) ஆதி பகவன் என்று ஏற்றுக்கொண்டால், புலைச்சி அநதணன் என்ற பொய்க்கதை மெய்க்கதை எனக் கொள்ளும் புல்லறிவாளர்க்கே சாலும்.

7) இப்பா இரண்டு ஆரியச் சொற்களைக் கொண்டிருத்தல் ஒன்றே இப்பா மேற்கூறிய பொய்க கதையை மெய்யெனக் கொண்ட பிற்காலத்துப் புலவன் ஒருவனால பாடப்பட்டதென்பதற்கு போதிய சான்றாகும்.

8) அகரத்தை முதல் எழுத்தாகக் கொள்ளாத மொழிகளும் உண்டு.

9) உலகு என்னும் சொல்லையும் தனித்தமிழ்ச் சொல்லென்று சொல்வதற்கும் இடமில்லை. பிறப்பு என்றும் வாய்ப்பாட்டுச் சொல் ஒன்றில்லாமல் வெண்பாவின் இறுதிச் சீராக முடிந்து வருவது வழக்காயினும் அவ்வாறு அச்சீரில் வெண்பா முடிவது அவ்வளவு சிறப்பன்று.

10) இறுதியில் சொல் பொருள இழுக்குகளை வைத்து அப்பாவினைப் பார்க்கையிலே நம் திருவள்ளுவர் இயற்றினார் என்றல் அவரது புலமையையும் பெருமையையும் பழிக்கத்துணிந்தாரே அவருடைய இப்பால் ஏனையோர் இப்பாவை அவருடையதென்னார்! (டாக்டர் தி.லீலாவதி எழுதிய தமிழ் தந்த வ.உ.சி. பக்கம் 98-99)

வ.உ.சி. இன உணர்ச்சி, நாட்டு உணர்ச்சி இவற்றுக்கு அடிப்படையான மொழி உணர்ச்சி மிக்கவர். அவர் மகாகவி பாரதியாரின் சம காலத்தவர். அவரால பாடப்பெற்ற பெருமை பெற்றவர். மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும் நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங் காண்கிலையோ என்ற பாரதியாரின் பாடல் வரிகள் (பாரதியார் கவிதைகள் -சுதந்திரப் பயிர்) செக்கிழுத்த வ.உ.சி.யையே சுட்டுகிறது.

கடவுள் வாழ்த்துப் பற்றிய வாக்குவாதத்துக்குள் ஆழமாக நுழைய நான் விரும்பவில்லை. இருந்தும் கடவுள் வாழ்த்துப் பறறி ஈ.வே.ரா. பெரியார் சொலலியிருக்கும் கருத்தினை கீழே காணலாம்.

1) முதலாவதாக கடவுள் என்ற தத்துவத்தைப்பற்றி குறளாசிரியருடைய கருத்து என்ன?

2) கடவுளை ஒரு பொருளாகக கொண்டிருந்தாரா? ஒரு பண்பாகக் குணமாகக் கொண்டிருந்தாரா?

3) அந்தப் பண்புக்கு ஆசிரியர் கடவுள் என்ற பெயர் கொண்டு இருந்தாரா?

குறளில் முதலாவது அதிகாரத்துக்குக் கடவுள் வாழ்த்து என்ற பெயர் தலைப்புப் கொடுத்திருப்பது குறள் ஆசிரியரால் கொடுக்கப்பட்டதா? அல்லது வேறு யாராலாவது கொடுக்கப்பட்டதா என்பது ஒருபுறமிருந்தாலும், அந்த அதிகாரத்துக்கு அப்பெயர் பொருத்தமற்றதாகும் என்பதே பொதுவான கருத்தாகும்.

**நன்றி: இணையத்தளம்**

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நடாத்தும் ஆன்மீக சொற்பொழிவின் 118 ஆவது தொடர் எதிர் வரும 11ஆம் திகதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 6.30மணிக்கு நல்லூர் கந்தசாமி கோயில் நாவலர் மணி மண்டபத்தில் இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு சொற்பொழிவை பலாலி ஆசிரிய கலாசாலையின் இளைப்பாறிய அதிபர் சோ.பத்மநாதன் "தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி" எனும் விடயம்பற்றி சொற்பொழிவாற்றவுள்ளார்.

(ப-9)


**சைவ பரிபாலனசபை – யாழ்ப்பாணம்**

**இந்துநாகரிகம்/இந்துசமயம்**

**முன்னோடித் தேர்வு 2005**

**தரம் – 13**

**மேற்படி தேர்வு 14.03.2005–15.03.2005**

**(திங்கள், செவ்வாய்) நடைபெறும்.**

*வ. கந்தசாமி*

*தேர்வுச் செயலாளர்* (7281)


## "ஆண்டவர் இரக்கமும் கனிவும் கொண்டவர்"



இயேசு தாமாக முன்வந்து முப்பத்தெட்டு ஆணடுகளாக துன்பப்பட்ட மனிதருக்கு குணம தந்ததை ஏற்றுக்கொள்ள மறுத்த யு'தர்கள் ஓய்வுநாள் சட்டத்தை இயேசு மீறியதாக கூறி அவரை துன் புறுத்துகிறார் கள்.

இந்த துன்பங்களையும், சட்ட தடைகளையும் மீறி இயேசு தொடர்ந்து நல்லதையே செய்கிறார். நலம் பெற்றவர் தன்னையறியாமல் இயேசுவை யு'தர்களிடம் காட்டி கொடுத் தாலும் இயேசு நல்லதையே செய்கின் றார். எல்லா நேரத்தி லும் எல்லா சூழ்நிலையிலும், எல்லார்க்கும் நன்மையே செய்யக காரணம் இயேசு கடவுளாகிய தந்தையோடு இணைந் திருந்த தினால்தான். அன்பே உருவான கடவுள் நம் மோடு இருக்கும் போது நன்மையைத் தவிர வேறு ஏதும் செய்ய இயலாது. நாமும் கடவுளோடு இணைந்து செயல்படுகி றோமா? இணைந்த தோழமைச் செயலில் நன்மையைத் தவிர வேறு ஏதுவும் செய்ய முடியாது என்பதை உணர்ந்திருக் கிறோமா?

### தவக்காலச் சிந்தனை

காவலன்

# இன்று ஒரு தகவல்

## முதல் வணக்கம்

கம்பர் ஒரு காவியம் எழுதினார். அது எவ்வளவு அழகானது என்று சொல்லித்தெரியவேண்டிய ஒரு விஷயம் இல்லையே? அவர் எழுதியதை எடுத்துச் சொல்லும் விதம் இருக்கிறதே அது ஒரு தனி அழகு. கம்பராமாயண சொற்பொழிவில் கேட்ட ஒரு விளக்கத்தைத்தான் இப்போது உங்களுக்குச் சொல்லப்போகிறேன். கம்பன் குறிப்பிட்டிருக்கும் ஒரு செயதியை வைத்துக்கொண்டு அங்கே என்ன நடந்திருக்கும் என்று ஊகித்துச் சொல்லியிருக்கிறார்கள்.

சீதாகல்யாணம் முடிந்தது. மணமண்டபத்தில் ஏகப்பட்ட கூட்டம். கல்யாணம் முடிந்தவுடன் மணமேடையிலிருந்து ராமர் எழுநது வந்தார். தொடர்ந்து சீதாபிராட்டியும் வந்துகொணடிருந்தார். கூட்டத்தில் இருந்தவர்களுக்கெல்லாம் ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆவல். அதாவது சீதையை திருமணம் செய்து கொண்ட ராமர் யாரை முதலில் வணங்கப போகிறார்? என்பதைத் தெரிந்து கொள்வதற்கு ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தனர்.

சீதை பின்தொடர ராமர் மணமண்டபத்தைச் சுற்றி வந்து கொண்டிருக்கிறார். தூரத்தில் தசரதர் உட்கார்ந்திருந்தார். அந்தப பக்கமாக ராமரும் சீதையும் சென்றார்கள். "சரி... தசரதருக்குத் தான் முதல் வணக்கம் என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்தது நடக்கவில்லை. இவர்கள் நேராக அவரைத் தாண்டிச்சென்றனர்.

அடுத்ததாக இருந்தது கௌசலை. அந்தப் பக்கமாக இவர்கள் போய்க்கொண்டிருந்தார்கள். ஓகோ... கௌசலைக்குத் தான் முதல் வணக்கம் என்று நினைத்தார்கள். ஏனென்றால் அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம் இதில் அன்னை தானே முதலில் வருகிறது. அதனால் தாயாரைத்தான் முதலில் வணங்கவேண்டும் என்று நினைக்கிறார் போலிருக்கிறது என்று நினைததார்கள். ஆனால் இவர் தாயையும் தாண்டிச் சென்றார்.

குலகுரு வசிஷ்டர் அடுத்து உட்கார்ந்திருக்கிறார். குரு வணக்கம் முதலில் என்று நினைக்கிறார் போலிருக்கிறது என்று எண்ணினார்கள் எல்லோரும். அதுவும் தப்பாகிவிட்டது. ராமர் வசிஷ்டரையும் வணங்காமல் சென்றார். இதைப்பார்த்த விசுவாமித்திரர் கொஞ்சம் நிமிர்ந்து உட்காருகிறார். அவர் முகத்தில் பெருமிதம்.அவர்களுக்குத் திருமணம் செய்துவைத்ததே நாம் தானே. அதனால் நம்மிடம முதலில் ஆசீர்வாதம் வாங்க வேண்டும் என்பதற்காகத்தான் இங்கு வருகிறார்கள் போலிருக்கிறது என்று நினைத்தார் விசுவாமித்திரர். ஆனால் அவரும் ஏமாந்துவிட்டார். அவரையும் தாண்டி போய்க்கொண்டிருந்தார்கள் ராமரும் சீதையும்.

சரி... அப்படியென்றால் யாரைத்தான் அவர்கள் முதலில் வணங்கப் போகின்றனர். தூரத்தில் ஒரு அம்மா நின்று கொண்டிருநதார். அவரது காலில் இருவரும் விழுந்தார்கள்.யார் அந்த அம்மா? அவர்தான் கைகேயி! ராமர்மீது அளவு கடந்த அன்பு வைத்திருந்த கைகேயி கம்பர் தனது ராமாயணத்தில் ராமன் கைகேயியை வணங்கியதை மட்டும் தான் குறிப்பிட்டிருக்கிறார்.

அதைமட்டும் வைத்துக்கொண்டு அங்கே என்ன நடந்திருக்கும் என்பதை அழகாகப் படம் பிடித்துக்காட்டியிருக்கிறார் இந்தப் பேச்சாளர். இதற்கு ஒரு ஆத்தமும் அவர் சொல்லியிருக்கிறார். இது ராமன் கைகேயியைப் பார்த்து இப்படிச் சொல்வது போலிருந்ததாம்! எப்படி?

"என் அவதாரத்தின் ரகசியம் உனக்குத்தெரியும். சீதையை ராவணன் துக்கிக்கொண்டு போகவேண்டும். அதைக் காரணமாக வைத்து ராவணவதம் நடக்கவேண்டும். அதனால் எனது பங்கை நான் செய்து முடித்துவிட்டேன். சீதையைத் திருமணம் செய்துகொண்டேன். இனி உன் பங்கை நீ செய்யவேண்டும். எங்களை காட்டுக்கு அனுப்பி வைக்கவேண்டும். அதற்குத்தான் உனக்கு முதல் வணக்கம் என்று சொல்வது மாதிரி இருந்ததாம். எழுதிய ஒரு விஷயத்தை எடுத்துச் சொல்லும விதமும் எவ்வளவு அழகாக இருக்கிறது பார்த்தீர்களா?

எனக்குத் தெரிந்த இரண்டு நண்பர்கள் இருக்கிறார்கள். இருவரும் தனியாக ஒரு அறை எடுத்துத் தங்கிக் கொண்டு சொந்தமாக சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருப்பவர்கள். அதில் ஒருவனுக்கு சமையல் தெரியும். இன்னொருவனுக்குக் கல்யாணம் நிச்சயமானது. அப்போது அவனைப் பார்த்து இவன் ஒரு கேள்விகேட்டான். உனக்கு கல்யாணம் முடிந்தவுடன் முதல வணக்கம் யாருக்கு வைப்பாய்?' என்றான.முதல் வணக்கம உனக்குத்தான் என்றான் இவன். "ஏன் அப்படி?" என்று கேட்டான் அவன்.

"ந சமைத்துத் தந்ததைக் கொஞ்ச நாளாக சாப்பிட்ட பிறகு தான் விரைவில் கல்யாணம் செய்துகொண்டால் நல்லது எனறு தோன்றியது, நல்லவிதமாக சாப்பிடலாமே என்பதற்காக! இந்தக் கல்யாணத்துக்குக் காரணகர்த்தாவே நீ தான். அதனால் உனக்குத் தான் முதல் மரியாதை என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தாயகத்தில் பலியானோருக்காக நோர்வேயில் அஞ்சலி நிகழ்வுகள்

(கொழும்பு)

வெலிகந்த பகுதியில் வைத்து படுகொலை செய்யப்பட்ட மட்டு. அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன் உட்பட்ட நான்கு போராளிகள், மாமனிதர் சந்திரநேரு அரியநாயகம் மற்றும் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் உயிரிழநத செந்தளிர் இல்ல சிறுவர்களின் நினைவோடு அக வணக்க நிகழ்வு நடைபெற்றது.

கடந்த 6ஆம் திகதி மாலை 6 மணிக்கு நோர்வேயின் தலைநகரம் ஒஸ்லோவில் நடைபெற்ற இந் நிகழ்வில, அகவணக்கம், சுடரேற்றலுடன் கவிதைகளும், பாடல்களும் இசைக்கப்பட்டதோடு சிறப்புரைகளும் இடம்பெற்றன.

தமிழீழததிலிருந்து ஓங்கி ஒலிக்கும் புலிகளின் குரல் வானொலியின் பொறுப்பாளர் தமிழன்பன் மற்றும் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனப் பணிப்பாளர் சுதர்சினி ஆகியோர் கருத்துரை ஆற்றியிருந்தனர். லெப். கேணல் கௌசல்யனின் விடுதலைப் பற்றுறுதி மிக்க உறுதியான போராட்ட வாழ்வு பற்றிக் குறிப்பிட்ட தமிழன்பன், தமிழீழத் தேசியத் தலைவர் போராட்டத்தினை எவ்வாறு நேர்த்தியுடன் வழிகாட்டி வழிநடத்திக் கொண்டிருக்கின்றார் என்பது பற்றிய ஆழமான கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாட்டினை உலகின் மனச்சாட்சிக்கு உணர்த்தும பணியில் தமிழ்த் தேசிய ஊடகங்கள் பலமடைய வேண்டும் என்றும் ஊடகங்களின் வளர்ச்சிக்கு மக்கள் உறுதுணையாக நிற்க வேண்டும் என்றும் தமிழன்பன் தனதுரையில் குறிப்பிட்டார். இந்நிகழ்வில் செந்தளிர் சிறுவர் நல்வாழ்வு நிதிக்காக ஆண்டு தோறும் உண்டியல் மூலம் நிதி சேகரித்து வழங்கும் நோரவே தமிழ் சிறார்களுக்கான சான்றிதழ்கள் வழங்கபபட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ப)

# அரசாங்கத்துடன் பேச்சு நடத்த புலிகளுக்கு அழுத்தம் கொடுக்குக

## ஐ.ரோ. ஒன்றியத்திடம் ஜனாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்துடன் விரைவில் நேரடிப் பேச்சுக்களை நடத்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு



அழுததம் கொடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐரோப்பிய ஒன்றியத்திடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதன்மூலம் பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்க முடியும் என நம்பிக்கை வெளியிட்டுள்ள ஜனாதிபதி எவ்வாறாயினும் சில விடயங்கள் தொடர்பாக நிலவும் கருத்து வேறுபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுகள் தொடர்பான ஆணையாளர் பெனிற்றா பெரெராவை நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்த போது ஜனாதிபதி இதனை வலியுறுத்தியுள்ளார்.

ஒஸ்லோ பிரகடனத்திற்கு ஏற்ப இலங்கையில் இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண்பதில் தற்போது காணப்படும் முரண்பாடுகள் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளுக்கு ஜனாதிபதி எடுத்துரைத்துள்ளார். (ப)

# மின்சாரசபையை விரைவில் புனரமைக்க வேண்டும்

## அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையை விரைவில் மீள்புனரமைப்புச் செய்யாவிட்டால் அதன் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதிலும் நெருக்கடிகள் தோன்றும் என மின்வலு எரிசக்தி பிரதியமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

மீள்புனரமைப்பு என்பது தனியார் மயமாக்கலோ அலலது வேறு தரப்பினருக்கு விற்பதோ அல்ல எனவும அவர் குறிப்பிட்டார்.

தற்போதுள்ள நிலையில் இருந்து இலங்கை மின்சார சபையை மீட்டெடுப்பதற்காக அதனை மீள் புனரமைப்புச் செய்யவேண்டும் என மின்வலு எரிசக்தி பிரதியமைச்சர் சுட்டிக்காட்டுகின்றார். இதில் உள்ள குறைபாடுகளை ஆராய்ந்து வினைத்திறன்மிக்க ஒன்றாகக் கட்டியெழுபபும் செயற்பாட்டையே இதன் மூலம் மேற்கொளள எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார். இன்று வரை இலங்கை மின்சார சபை 80 பில்லியன் ரூபா கடனபட்டுளளது. எதிர்வரும் இரண்டு மாதங்களுக்கு இலங்கை மின் சார சபையைக் கொண்டு நடத்த குறைந்தது 5 ஆயிரம் மில் லியன் நிதி தேவைப்படுவதாகவும் அவர் கூறினார்.(க)

### பதில் உபவேந்தர் மீதான அச்சுறுத்தலைக் கண்டித்து

# தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

உபவேந்தர் எம். நசீரின் மீதான கொலை முயற்சியைக் கண்டித்துத் தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன்தினம் கணடன ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். தென் கிழக்குப் பல்கலைக்கழக பதில் உபவேந்தர் எம்.நசீரின் இல்லம் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டையும் அவருக்கு விடுக்கப்பட்டுள்ள கொலை அச்சுறுத்தலையும் கண்டித்து இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. நேற்று முன்தினம் காலை பல்கலைக்கழக முன்றலில் கூடிய மாணவர்கள் அங்கிருந்து வாசக அட்டைகளை ஏந்திய வாறு ஒலுவில் சந்தி வரை சென்று ஆர்பபாட்டம் செய்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் தொடர்புடைய குற்ற வாளிகள அடையாளம் காணப்பட்டு தண்டனை வழங்கப் படவேண்டும் என்ற கோரிக்கையையும் மாணவர்கள் முன் வைததிருந்தனர். கடந்த வாரம் நடந்த உபவேந்தர் இல்லம் மீது நடந்த தாககுதலின் போது பதவி விலக வேண்டும் என்ற அச்சு றுத்தல் கடிதமொன்றை வெள்ளைப் புடவை விரித்து அதன மேல் வைத்து விட்டு ஆயுதக் கும்பல் தப்பிச் சென்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ப)












வடபராந்தியத்திற்கான வியாபார அபிவிருத்தி நிலையம் நேற்று முனதினம் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிலையத்தை தமிழீழ விடுதலைப் புலிகளின் வணிக ஒன்றியப் பொறுப்பாளர் ஜெயராஜ் திறந்து வைப்பதையும், இலங்கை வியாபார அபிவிருத்தி நிறுவனத்தின் நிறை வேற்றுப்பணிபாளர் றொஹாந்தி பெரேரா , வியாபார சேவைகள் உதவிகள வழங்கும் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மார்க்வான் ஸ்ரீன் வைக் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட வங்கி முகாமையாளாகள, வியாபாரிகளையும் படங்களில் காணலாம். படங்கள் (ஞா. ஜங்கரன்)











அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண்கள அபிவிருத்தித் திட டப்பிரிவு 20 கிராம மாதர்சங்கங்கள் மாதர் குழுக்களுடன் இணைந்து நடத்திய மகளிர்தின நிகழ்வு நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் திருமதி மனோன்மணி சண்முகதாஸ், திருமதி சரோஜா சிவச்சந்திரன் உரையாற்றுவதையும், தவில் நாதஸ் வர பெண் கலைஞர்கள் தமது கலைத்திறனை வெளிப்படுத்துவதை யும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம.

படங்கள்:- ஞா.ஐங்கரன்

## ஜப்பான் குழு இலங்கை வரும்

(கொழும்பு)

இலங்கையில் இயற்கை அனர்த்த முன்னெச்சரிக்கை மையத்தின் அவசியம் குறித்து ஆராய ஜப்பானிய அரசாங்கத்தின் மூன்று பிரதிநிதிகள் எதிர்வரும் 15 ஆம திகதியளவில் இலங்கை வரவுள்ளதாக தேசிய வள பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் வள அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

ஜப்பானிய அரசாங்கத்தின் இப்பிரதிநிதிகள் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு உட்பட்ட சகல பிரதேசங்களையும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (க-9)

## உதைபந்தாட்ட பயிற்சி

(கொழும்பு)

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் பாடசாலைகளில் உதைபந்தாட்டத் துறையை ஊககுவிக்கும் நடவடிக்கையாக எதிர்வரும் காலங்களில் பாடசாலைகளில் உதைபந்தாட்டத்திற்கு பொறுப்பாக இருக்கும ஆசிரியர்களுக்கு உதைபந்தாட்டததுறையில் பயிற்சிகள் வழங்குவதற்கு இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

கோட்டை பெத்தகானவில அமைந்துள்ள உதைபந்தாட்ட பயிற்சியகத்தில் பயிற்சி நெறி நடாத்தப்படவுள்ளது.

ஆசிரியர்களிடமிருந்து பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அதிபரின் கையொப்பமிடப்பட்டு இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுள்ளனர். (க-9)

## மனநோயாளர்களை கைவிடும் உறவினர்கள்

(கொழும்பு)

மனநோயாளர் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வரும் பெண் நோயாளிகளுக்கு அவர்களது உறவினர்களிடமிருந்து போதிய அக்கறையும் உதவிகளும் கிடைப்பதில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

முல்லேரியா மனநோய் வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் டாக்டர் லுவான் மாறதுங்க இவ்வகை நோயாளர்களின் உறவினர்களுக்கு விடுத்த வேண்டுகோளில் நோயாளர்களின் நலனை கருத்திற்கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

வைத்தியசாலையில் நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டது. உறவினர்கள் அவர்களைக் கைவிட்டு விடுகின்றனர். சிகிச்சை முடிந்து நோயாளர்கள் குணமடைநததும் அவர்களை உறவினர்கள் அழைததுச்செல்ல வேண்டியது அவசியமெனவும் டாக்டர் மாறதுங்க மேலும் தெரிவித்தார். (க-7)

## நட்டஈட்டுக் கொடுப்பனவு


(மட்டக்களப்பு)


மட்டக்களப்பு மாவட்டத்தில கடற்கொந்தளிப்பினால் தமது தொழில்களை இழந்திருக்கும் பெண்கள் நட்டஈட்டுக் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ள முடியும் என மகளிர் விவகார அமைச்சு அறிவித்துள்ளது.


பெண்கள் தமது வீடுகளில் நடாத்திக்கொண்டிருந்த வியாபாரம், கைத்தொழில் போன்றவைகள் கடல் அனர்த்தத்தினால் பாதிககப்பட்டிருப்பின் அவர்கள் இதற்கான நட்டஈட்டினைக் கோரி விணணப்பிக்க முடியும் எனவும் அமைச்சு வெளியிட்டிருக்கும் தகவல் குறிப்பில் சுட்டிக்காட்டபபட்டுள்ளது. சுயதொழில்களை மீளவும் ஆரம்பிப்பதற்குத் தேவையான நிதியுதவிகள் மற்றும் வேறுவகையிலான உதவிகளை வழங்கும் செயற்திட்டம் ஒன்றும் தயார் செய்யப்பட்டிருப்பதாக மகளிர் விவகார அமைச்சுத் தெரிவித்துள்ளது. மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கடற்கொந்தளிப்பினால் பாதிப்புற்ற பெண்களின் தரவுகள் தற்போது மகளிர் விவகார அமைச்சினால சேகரிக்கப்பட்டு வருகிறது.(க-9)











யாழ்.சைவபரிபாலனசபையின் தலைவரும் பரீட்சை செயலாளருமான சைவப்புலவர் வ.கந்தசாமி அவர்களின் பணிநலம் பாராட்டு விழா கடந்த 6ஆம் திகதி சைவபரிபாலனசபை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின் விழாநாயகனையும் மேடையில் அமர்ந்திருக்கும் பெரியோர்களையும் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

படங்கள்:- ஞா.ஐங்கரன்

### புல்மோட்டை முஸ்லிம்களின் மையவாடி

# கிளறப்பட்ட விவகாரம் விசாரிக்க நீதவான் உத்தரவு

(திருகோணமலை)

புல்மோட்டை முஸ்லிம் மையவாடியில் புதைக்கப்பட்ட சடலங்களில் இருந்து மண்டையோடுகளை அகற்றி எடுத்ததாக இராணுவச் சிப்பாய் மீது குற்றம்சாட்டி கடந்த சனியன்று புல்மோட்டை வாசிகள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தையடுத்து நேற்றுமுன்தினம் ஹெபபட்டிக்கொல்லாவ நீதிவான் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார்.

இந்தச் சம்பவத்தின்போது அநுராதபுரம் சட்ட வைத்திய அதிகாரியும் சமுகமளித்திருந்தார்.

இதனைத்தொடர்ந்து மையவாடியின் சந்தேகத்துக்கு இடமான பகுதியைத் தோண்டிப் பார்த்தபோது மண்டையோடு அற்றநிலையில் எலும்புக்கூடு ஒன்றும் காணப்பட்டுள்ளது. இதனை மீண்டும் பாதுகாப்பான பகுதியில் புதைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பான விசாரணையினைத் தொடர்ந்து மேற்கொள்ளுமாறு அவர் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ப-4)

# சிரமதானம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஸ்ரீகாளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கடந்த 5ஆம் திகதி தொடக்கம் புங்குடுதீவு சிவலைப்பிட்டி அம்பாள் விளையாட்டுக் கழகம், மாதர் அபிவிருத்திச் சங்கம, சிவலைப்பிட்டி சனசமூக நிலையம் என்பன இணைந்து சிரமதானப் பணியில் ஈடுபட்டுவருகின்றன.

(ப-126)

# திருவிழா

(மருதங்கேணி)

சக்கோட்டை புனித சவேரியார் ஆலயத் திருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் இடம்பெறவுள்ளது. (ப-35)

# பறவைக் காய்ச்சலை தடுக்கும் மருந்து வியட்நாமில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

பறவைக்காய்ச்சல் தடுப்புக்கான தடுப்பூசி மருந்து வியட்நாமில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான பூர்வாங்க பரீட்சை வெற்றியளித்துள்ளதென உயர் மட்ட மருத்துவ அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்கள்.

இப்பரீட்சையில் கண்டுபிடிக்கப்பட்ட தடுப்பூசி மருந்து கடந்தமாத ஆரம்பத்தில் மூன்று குரங்குகளின் உடல்களில் ஏற்றப்பட்டது.

இது பறவைக் காய்ச்சலுக்கான எச்.பி. என வைரஸ் கிருமிகளை வலுவிழகச்செய்யும் மருந்தாகும்.

மூன்று வாரங்களுக்குப் பின்னர் மூன்று குரங்குகளும் மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன.

இதில் அக்குரங்குகள் உடல்வலுவோடு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன் இந்நோய்க்கு எதிராக போராடக்கூடிய சக்தியையும் அவை பெற்றிருந்தமை தெரியவந்தது.

தடுப்பூசி மருந்து குரங்குகளின் உடல்களில் அடுத்தடுத்து ஏற்றப்பட்டுளளது என்றும் அவர்கள் மேலும கூறினார்கள்.

இதேவேளை அடுத்த இருவாரங்களில் இதற்கான பலன்கள் கிட்டுமென எதிர்பார்க்கிறோம் எனத் தேசிய சுகாதார தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் இயக்குனர் கயின் டேரன் ஹைஹன் ராய்ட்டருக்குத் தெரிவித்தார்.

கடந்த டிசம்பர் முதல் வியட்னாமல் பறவைக்காய்ச்சல் வைரஸ்"க்கு 14பேர் கொல்லப்பட்டுள்ளனர். (க-9)

### சுனாமியால் அடையாள அட்டைகளை இழந்தோருக்கு

# அடுத்துவரும் மூன்று வாரங்களுக்குள் அடையாள அட்டை கிடைக்கும்

(பருத்தித்துறை)

சுனாமி ஆழிப் பேரலையால் தேசிய அடையாள அட்டைகளை தவறவிட்டோர், அனர்த்தத்தால் சேதத திற்குள்ளான அடையாள அட்டைகள் புதுப்பித்தல் போன்றவற்றுக்கான விண்ணப்பங்களைப் பெற்று அடையாள அட்டை வழங்கும் சேவை இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை சிவன்கோவில் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற இச்சேவையினை ஆட்பதிவுத் திணைக்கள நடமாடும் சேவையினர் தேசிய ஆட்பதிவுத் திணைக்கள உதவி ஆணையாளர் மகேஸ்கருணா நாயக்க தலைமையிலான குழுவினர் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது பருத்தித்துறை கிராம சேவகர்களும், பொலிஸாரும விண்ணப்பங்களை உறுதிப்படுத்தி வழங்கினர். பல நூற்றுக்கணக்கானோர் விண்ணப்பம் செய்திருந்தனர். இவர்களுக்கான தேசிய அடையாள அட்டைகள் மூன்று வாரங்களுக்குள் அனுப்பிவைக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

(ப-113)

# ஜெயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீராமகிருஸ்ணரின் 170ஆவது ஜெயந்தி விழா எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ணா வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

காலை 5.00 மணி முதல் மாலை 5.30மணி வரை நடைபெறும் இந் நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது. (க-9)

# மீனவர்களுக்கு போதியளவு நிவாரணம் வழங்கப்படவில்லை

### உலக கடற்றொழிலாளரின் ஸ்தாபக உறுப்பினர் போலின் ரங்குயூரோ

(கொழும்பு)

சுனாமிப்பேரலைத் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட மீனவ சமூகத்தினருக்கு அவர்களது ஜீவனோபாயததை மீள ஆரம்பிக்க போதியளவு நிவாரணங்கள் வழங்கப்படவில்லை என்று உலக கடற்தொழிலாளா கூட்டமைப்பின் ஸ்தாபக உறுப்பினரும், இணைப்பாளருமான போலின் ரங்கியூரோ தெரிவித்துள்ளார்.

அடுத்த சில நாட்களில் இடைப்பட்ட பருவப் பெயர்ச்சி ஆரம்பமாகவிருப்பதனால் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு தற்காலிகக் கூடாரங்களில் தங்கியிருக்கின்ற மக்கள் மேலும் பல பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்ட பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர், கடலை அண்மித்த பிரதேசங்களில் தமது ஜீவனோபாயத் தொழிலை மேற்கொண்டிருந்த மீனவ சமூகம் குறித்து அதிகாரிகள் பெருமளவு கவனம் செலுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மீனவ மக்களுக்கு நிவாரணங்கள் பாகுபாடின்றி வழங்கப்படவேண்டும். அதில் எவ்வித தயக்கமும் காட்டக்கூடாது என அவர் கேட்டுக்கொண்டார். (க-4)

# வடக்கு – கிழக்கு மாகாணத்திலும் பாற்பண்ணைக் கிராமம்

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தற்போது பால் உற்பத்தி அதிகரித்து வருவதாக வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார - கால்நடை உற்பத்திப்பணிப்பாளர் டாக்டர் கந்தையா சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் இப்பகுதியில் ஒரு கோடி லீற்றர் பால் உற்பத்தி செய்யப்படடிருக்கிறது. இம்மாகாணத்தில பாற்பண்ணைக் கிராமங்களை அமைப்பதற்கான திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கோழிப் பண்ணைத் திட்டமொன்று இவ்வருடம் அம்பாறையில் ஆரம்பிககப்படும். இதற்கமைய அம்பாறை விவசாயிகளிடையே கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்படவுள்ளன.

வடக்கு -கிழக்கிலுள்ள கால்நடை சத்திரசிகிச்சை வைத்தியர்களுக்குத் தேவையான உபகரணங்களை அமைச்சு அனுப்பிவைக்கவுள்ளதாகவும் டாக்டர் சிவலிங்கம் மேலும் தெரிவித்தார்.

(க-7)

### வலம்புரியின் ஆசிரியர் தலையங்கத்திற்கு

# யாழ்.மருத்துவபீட மாணவனின் பதில்...

**04.03.2005 அன்று வலம்புரியில் "மருத்துவ பீட மாணவர்களுக்கு ஓர் அன்புமடல்" என எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்கத்திற்கு பதில் அளிக்கும் வகையில் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் தியாகராஜா தவநேசன் எழுதிய பதில் இங்கு அப்படியே பிரசுரமாகின்றது. ஆ-ர்**

வலம்புரி ஆசிரியருக்கு,

தங்கள் சிந்தனையில் 04.03.2005 தினப்பத்திரிகையில் வரையப்பட்ட ஆசிரியர் தலையங்கத்திற்கான பதிலை தங்களுக்கும் மக்களுக்கும் கொடுக்கவேண்டிய தார்மீகப் பொறுப்பு ஒவ்வொரு மருத்துவ மாணவனுக்கும் உண்டு என்ற அடிப்படையில் இந்தக் கடிதத்தை வரைகின்றேன்.

முதலில் பகிடிவதை சம்பந்தமான செய்தியைத் தங்களது பத்திரிகையில் பிரசுரித்ததன் மூலம் பகிடிவதைக்கு எதிரான எங்களது செயற்பாடுகள் சற்று உத்வேம் பெற்றது என்ற வகையில் தங்களுக்கும் தங்களுடைய பத்திரிகைக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எவ்வாறாயினும் தனியார் மருத்துவக் கல்லூரிகளின் உருவாக்கம் சம்பந்தமாக, சமூதாயத்திற்கு பொறுப்பு மிக்க உன்னதமான பணியை செய்து கொண்டிருக்கும் தங்களது சிந்தனைகளின் எழுத்துவடிவங்களைப் பார்த்து ஒருபுறம் அதிர்ச்சியும் மறுபுறம் கவலை கலந்த ஆத்திரமும் அடைந்தோம். தங்களது கட்டுரையின் போக்கு தனியார் மருத்துவக் கல்லூரிகளின் உருவாக்கத்தை ஆதரிப்பதாகவும், எங்களுடைய போராட்டங்கள் நியாயமற்றவை என்ற தொனியில் உங்களைப் போன்ற சமூகப் பொறுப்புள்ள ஒருவரால் வரையப்பட்டதே எமது உள்ளக்குமுறலகளுக்குக் காரணமானது.

அன்பான ஆசிரியரே! கல்வி என்பது பலசரக்கு வியாபாரம் அல்ல என்பது தாங்கள் அறியாத ஒன்றல்ல. இது வியாபாரமாக்கப்பட்டதனால் எமது அண்டைநாட்டில் கல்வி எவ்வாறு செல்வந்தரிடம் சிக்குண்டு அவஸ்தைப்படுகிறது என்பது கண்கூடு. இதை நான் சொல்லித்தான் பத்திரிகைத்துறையில் இருக்கின்ற நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய ஒன்றல்ல. இந்தநிலை எமது நாட்டிலும் ஏற்படுவதை நீங்கள் ஆதரிக்கின்றீர்களா?

வெட்டுப்புள்ளி முறைப்பற்றி சுட்டியிருந்தீர்கள். வெட்டுப்புள்ளி முறையில் மருத்துவம், பல் மருத்துவம், மிருக மருத்துவம்... என்று பல படிமுறைகள் உள்ளன. இந்தமுறையில் பணச்செல்வாக்கோ, சமூக அந்தஸ்தோ இல்லாமல் மாணவர்கள் தெரிவுசெய்யப்படுகின்றார்கள் என்பதில் நாம் பெருமையடைகின்றோம். ஆனால் தனியார் மருத்துவக் கல்லூரிகளின் தோற்றம் பணபலம், பின்புலச் செல்வாக்கு உள்ளவர்களின் கைகளை ஓங்கச்செய்துவிடும் என்பதில எவ்வித ஐயமும் கிடையாது.

சரி, ஒன்று, இரண்டு புள்ளிகளால் பல்கலைக்கழக அனுமதியை இழந்த மாணவர்கள் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் பயின்று பட்டம் பெறுவதை நாங்கள் ஏற்றுக்கொள்வதாக வைத்துக்கொள்வோம். வெட்டுப்புள்ளியால் பல்கலைக்கழக அனுமதியை இழந்த மாணவர்களில் எத்தனைபேருக்கு 60 லட்சம் ரூபாவிற்கு அதிகமான ஒரு தொகையைக் கொடுத்து கல்வியைப் பயிலும் வசதி உள்ளது? இந்தப் பெரும் தொகையை பெரும் செல்வந்தர்களால் மட்டுமே செலுத்தமுடியும் என்பது உங்களுக்குத் தெரியாத ஒன்றல்ல. இவ்வாறு செல்வந்தர்களின் பிள்ளைகள் பட்டம் பெறும்போது அவர்களை ஒத்த ஏழை மாணவர்களுக்கு ஏற்படப்போகும் மன உளைசசல்களை நீங்கள் சிந்தித்துப் பார்க்கவில்லையா? எனவே செல்வந்தர்களின் கையில் கல்வி வியாபாரப் பொருளாக மாறுவதையும், ஏழை மாணவர்கள் பாதிக்கப்படுவதையும் நீங்கள் ஆதரிக்கின்றீர்களா? உங்களுடைய கருத்துக்கள் ஒரு சில செல்வந்தர்களின் மனதை ஆசுவாசப்படுத்தும் அதேவேளை ஏழை மாணவர்களின் கல்விக்கு உலைவைப்பதாகவே நான் கருதுகின்றேன்.

அடுத்தது மக்களின் வரிப்பணத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் படித்துப் பட்டம்பெற்றதும் நாட்டையும், மக்களையும் மறந்துவிட்டு விமானம் ஏறுகின்றார்கள் என்ற உங்களது ஆசிரியர் தலையங்கத்தில் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கின்றது. ஆனால் ஆண்டுதோறும் இலங்கை மருத்துவக் கல்லூரிகளில் இருந்து வெளியேறும் மருத்துவர்களில் எத்தனை பேர் விமானம் ஏறிப்போகிறார்கள் என்பதனை சீர்தூக்கிப்பார்க்க மறந்துவிட்டீர்கள் போலும்! நீங்கள் கூறுவது போன்று பெரும்பாலான மருத்துவர்கள படித்து பட்டம் பெற்ற பின்பு நாட்டைவிட்டுச் சென்றிருந்தால் இன்று இந்த நாட்டில் பணிபுரியும் மருத்துவர்கள் எங்கிருந்து வந்தவர்கள்? ஒருசில மருத்துவர்கள் வெளிநாடு செல்வதைப் பூதக்கண்ணாடி கொண்டு பார்த்துவிட்டு ஒட்டுமொத்த மருத்துவ சமூகத்தின்மீது சேறுபூசுவதும், அதனை காரணங்காட்டி தனியார் மருத்துவக் கல்லூரிகளின் தோறறத்தை நியாயப்படுத்துவதும் அழகல்ல என்பதனை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக எனது அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய ஆசிரியர் அவர்களே! இறுதியாக மருத்துவ மாணவர்கள் சார்பாக ஒரு பணிவான வேண்டுகோளை உங்கள் முன்னும், மக்கள் முன்னும் வைக்க விரும்புகின்றேன். தயவுசெய்து கல்வி, பல மிக்க செல்வந்தர்களின் கைகளில் சிறைப்பட்டு, அடிபணிந்து, சோபையிழக்கும் நிலையை எதிர்த்து எமது மாணவா சமுதாயம் முன்னெடுக்கும போராட்டங்களையும், எங்களது மன நிலைகளையும் புரிந்துகொள்ளுங்கள். இந்தப் போராட்டங்களையும் எங்களது உணர்வுகளையும் நீங்கள் நியாயப்படுத்தாவிடினும் அவற்றைக் கொச்சைப்படுத்தாமல் இருக்க வேண்டும் என்பதே எனது பணிவான வேண்டுகோள். 'நன்மை செய்யப் பிறந்த நீ நன்மை செய்யாவிடினும் தீமை யாவது செய்யாதிரு' என்ற உண்மையை நன்கு உணர்ந்த நீங்கள் எங்கள் உணர்வுகளை புரிந்துகொள்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் எனது மடலை நிறைவுசெய்கின்றேன்.

நன்றி

தியாகராஜா தவநேசன்,
மருத்துவபீட மாணவன்,
யாழ்.பல்கலைக்கழகம்.



இருபாலை எக்ஸ்பிரஸ் இன்ஸ்ரியூட் இயக்குனரும் பிரபல கணித ஆசானுமாகிய த.வரதராஜாவின் பொன்விழா கடந்த முதலாம் திகதி புதன்கிழமை நடைபெற்றது. இவ்விழாத் தலைவராகிய யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜா தலைமையுரையாற்றுவதையும், நல்லை ஆதீன முதல்வர் விழா நாயகனுக்கு பொன்னாடை போர்த்தி ஆசீர்வதிப்பதையும், விழாக் குழுவினரால் பொன்விழாக் கேடயம் வழங்கப்படுவதையும், வரதராஜா ஆசிரியர் தனது 50 ஆவது பிறந்தநாள் பரிசாக சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் வளர்ச்சிக்காக ஒரு இலட்சம் ரூபாவிற்கான காசோலையை தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் ஜெயராஜிடம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

தங்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து - குறள்

வலம்புரி

# கிழக்கில் தொடரும் படுகொலைகள் தடுப்பது யார் கையில்

யுத்தநிறுத்த உடன்படிக்கை பெயரளவில் மட்டுமே இருப்பது போல் தெரிகிறது. நாளுக்கு நாள் மனித உயிர்கள் துப்பாக்கிகளுக்கு இரையாகிக் கொண்டிருப்பது மீண்டும் ஓர் யுத்தம் ஏற்பட்டு விட்டதோ என்ற பிரமையை ஏற்படுத்தியுள்ளது.

'இனந்தெரியாதோரின் தாக்குதல்' என்ற பெயரில் இடம்பெறுகின்ற படுகொலைச் சம்பவங்கள் விளக்கம் விசாரணைகள் இன்றி வெறும் புத்தகப் பதிவுடன் முற்றுப்பெற்றுவிடுகின்றன.

யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலில் இருக்கின்றவேளையில் கொலைச் சம்பவங்கள் இடம்பெறுகின்றதெனில் அதனை யுத்தம் நிறுத்தம் என்று கூறுவது எவ்வகையிலும் பொருத்தம் உடையதாக மாட்டாது.

அதேநேரம் யுத்தநிறுத்த காலப் பகுதியில் துப்பாக்கிச் சத்தங்கள் ஆங்காங்கே கேட்கின்றது எனில் மீண்டும் யுத்தம் ஆரம்பிப்பதற்கான அறிகுறியாக அதனை கொள்ள வேண்டும்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தமிழர் தாயகப் பகுதியில் இடம்பெறுகின்ற கொலைகள் குறித்து இம்மியும் கவலை கொள்வதாக இல்லை. யுத்த நிறுத்த உடன்படிக்கை காலத்தில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்து இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் நடவடிக்கையில் ஈடுபட்டால் இத்தகைய இனந்தெரியாத கொலைகள் இடம்பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் அறவே இல்லாமல் போய்விடும்.

ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்று அதன் அடிப்படையில் இடைக்கால சபைத் திட்ட வரைபை விடுதலைப்புலிகள் முன்வைத்தபோதிலும் அதனை ஏற்றுக்கொள்வதில் அரசு பின்னடிக்கின்றது.

இலங்கையில் தமிழர் பிரச்சினையும் தீர்க்கப்படவேண்டும் என்பதை தென்னிலங்கை சிங்கள மக்கள் உணர்ந்துகொண்டிருந்தாலும் ஆளும் வர்க்கம் அதனை ஏற்றுக்கொள்வதாக இல்லை.

ஒற்றையாட்சியின் கீழ் பேச்சுவார்த்தை - தீர்வு எனக் கூறிக்கொண்டிருந்தால் எதுவுமே நடைபெறப்போவதில்லை. இந்த நாட்களில் மீண்டும் ஓர் யுத்தம் ஏற்படுவதை தடுப்பதாயின்; படுகொலைகள் நாளுக்கு நாள் இடம்பெறுவதற்கு அடியோடு முற்றுப்புள்ளி வைப்பதாயின் விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால சபைத்திட்ட வரைபை ஏற்றுக்கொள்வதற்கு அரசு தயக்கம் காட்டலாகாது.

அவ்வாறு தயக்கம் காட்டுமாயின் மீண்டும் ஓர் யுத்தம் ஏற்படுவதும் பின்னர் அதனை நிறுத்துவதற்கு இல்ங்கையில் இரு நாட்டு எல்லைகளை தீர்மானிக்க வேண்டியதாகவும் இருக்கும்.

பட்டு வேட்டிக்கு ஆசைப்பட்டு கட்டியிருந்த கோவணத்தையும் பறிகொடுத்த கதையாக ஜனாதிபதி சந்திரிகாவினதும் ஜே.வி.பியினதும் நடவடிக்கைகள் அமையப்போவதை கட்டியம் கூறுவதாகவே கௌசல்யனின் கொலைச்சம்பவம் உட்பட தொடர்ந்து கிழக்கில் இடம்பெறும் படுகொலைச் சம்பவங்கள் அமைந்துள்ளன.

இலங்கை ஒற்றையாட்சியின் கீழ் ஆளப்பட வேண்டுமென விரும்புகின்ற சிங்கள அரசுகளுக்கு கிழக்கில் இடம்பெறும் படுகொலைச் சம்வங்களை தடுக்கும் திராணி இல்லையென்றால் ஒற்றையாட்சியில் ஆசைகொள்வதில் அர்த்தம் இல்லை.

கிழக்கில் நாளுக்கு நாள் இடம்பெறும் படுகொலைச் சம்பவங்களை முதலில் தடுத்து நிறுத்துவதும் விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால சபைத் திட்டவரைபின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதுமான இருபெரும் பொறுப்பை ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசு உடனடியாக செய்தாக வேண்டும்.

# வான்களைப் புனரமைக்கும் விவகாரங்களில் படையினரது கெடுபிடிகள் நீக்கப்படல் வேண்டும்

## இல்லையேல் போராட்டங்கள் வெடிக்கும் என எச்சரிக்கை

(துன்னாலை)

**சுனாமி ஆழிப் பேரலையால் மிகவும் மோசமான முறையில் அழிவுற்ற தொண்டமனாறு முதல் பருத்தித்துறை வரை கடற்பரப்புப் பிரதேசங்களில் வான்களைப் புனரமைத்து கரையோர அணை அமைக்கப்படுவதில் உள்ள படையினரின் கெடுபிடிகள் நீக்கப்படல் வேண்டும். இல்லையேல் இவற்றை வலியுறுத்தி வெகுஜனப் போராட்டம் ஒன்றை முன்னெடுப்போம் என வடமராட்சி வடக்கு மற்றும் வலிகாமம் வடக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசங்கள் கூட்டாகக் கோரியுள்ளன. இது குறித்து யாழ். அரச அதிபருக்கான மகஜர் ஒன்றை பருத்தித்துறைப் பிரதேச செயலரிடம் கையளித்துள்ளனர்.**

தொண்டமனாறு முதல் பருத்தித்துறை வரையான கடற்கரையோரப் பிரதேசங்கள் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டமையால் அப் பிரதேசங்களில் "சேவா லங்கா" நிறுவன உதவியுடன் வான் தோண்டுதல், கரையோரப் பாதுகாப்பு அணை அமைத்தல் போன்றவற்றில் ஈடுபட்டபோது இதனை படையினர் தடுத்து நிறுத்தியிருந்தனர்.

வான் அணைகள் இரண்டு அடி உயரத்திற்கு மேல் இருக்கக் கூடாதெனவும் பிற்பகல் 4 மணிக்கு மேல் புனரமைப்பு பணியில் ஈடுபடக்கூடாது ஒவ்வொரு சங்கத்தினரும் இரண்டு நாட்களுக்கு மேல் புனரமைப்புப் பணியில் ஈடுபடக்கூடாது எனவும் இராணுவத்தினர் அறிவுறுத்தினர்.

இதனைத் தொடர்ந்து புலோலி மேற்கு எரிஞ்சும்மன் கோவிலடியில் ஒன்றுகூடி சில தீர்மானங்களை மீனவ சங்க சமாசத்தினர் எடுத்திருந்தனர்.

கரையில் இருந்து அணையை நான்கு அடி உயரத்திற்கு கட்டுதல், தொண்டமனாறு முதல் பருத்தித்துறை முனை வரையுள்ள பகுதிகளில் வான்களைப் புனரமைத்தல், ஆழிப்பேரலையால் சிதறுண்ட முருகைக் கற்களை முன்பு இருந்த அணைக்கட்டிற்கு எடுத்துப்போடல், வான் பாதையை ஆழமாக்கல், வேலைகள் இடம்பெறும்போது படையினர் பார்வையிடலாம். ஆனால் நிர்வாகம் செலுத்தக்கூடாது, படகுகள் வரும் பாதையை படையினர் வரையறுக்கக்கூடாது, படகுகள் கட்டப்படும் இடங்களை படையினர் கட்டுப்படுத்தக்கூடாது போன்ற தீர்மானங்களே எடுக்கப்பட்டன.

சமாசங்களின் இக் கலந்துரையாடலின் போது வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ,சமாசங்களின் இணைப்பாளர் க. சூரியகுமாரன், கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அருணன், கடற்புலிகளின் வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பழகன், சுனாமி அனர்த்தக் கூட்டுச் செயலணிப் பணிப்பாளர் பாலையா ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேற்படி கலந்துரையாடல்களின்போது எடுக்கப்பட்ட தீர்மானங்களே பருத்தித்துறைப் பிரதேச செயலர் மூலம் யாழ். அரச அதிபர் க. கணேஸ் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி அனுப்பிவைக்கப்பட்டுள்ள மகஜரின் பிரகாரம் தமக்கு சாதகமான சூழ்நிலை உருவாக்கப்படாது விடுமிடத்தில் தாம் வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுப்போம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-113)

# வெலிக்கந்தை சூட்டுச் சம்பவத்தின் சூத்திரதாரிகள் கண்டறியப்படவில்லை

## பொலிஸார் கைவிரிப்பு

(வாழைச்சேனை)

பொலநறுவை மாவட்டம் வெலிக்கந்தை பிரதேசத்திலுள்ள கொலக்குனாவவெளியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் சூத்திரதாரிகள் யார் என்பது குறித்து இதுவரை கண்டறியப்படவில்லை என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ். சவஹுன் இதுபற்றி தெரிவித்துள்ளார்.

இக் கொலைச் சம்பவத்திற்கு மகாவலி காணி சுவீகரிப்பின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகளும் காரணமாக இருக்கலாம் என்று தகவல்கள் தற்போது தமக்குக் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதன் காரணமாக பல்வேறு கோணங்களில் இதுபற்றிய விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் இதற்கென இரண்டு விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை இந்த கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் சிங்கள மொழியில் பேசியதாக அப்பிரதேச மக்களின் தகவல்கள் தெரிவிக்கின்றன. துப்பாக்கிதாரிகள் முதலில் சிங்கள விவசாயியின் வீட்டிற்குச்சென்று அவர் மீதும் அவரது பிள்ளைகள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதில் விவசாயி கொல்லப்பட்டார். அவரது மூன்று வயது மற்றும் 16 வயது பெண்பிள்ளைகள் காயமடைந்துள்ளனர். அதன் பின்பு தமிழ் விவசாயியின் வீட்டிற்குச் சென்று அவரை வெளியே அழைத்து துப்பாக்கியால் சுட்டுக்கொன்றுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டு முஸ்லிம் விவசாயியின் வீட்டிலிருந்தவர்கள் வெளியே வந்து பார்த்தபோது, அவ்வழியாக வந்த ஆயுததாரிகள் அந்த வீட்டிலிருந்த அனைவரையும் துப்பாக்கி முனையில் வீட்டிற்கு உள்ளே தள்ளிச்சென்று துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இதில் நான்கு முஸ்லிம் விவசாயிகள் கொல்லப்பட்டுள்ளனர். விவசாயி ஒருவரின் மனைவி காயமடைந்துள்ளார். இச் சம்பவம் தொடர்பாக போர்நிறுத்த கண்காணிப்புக் குழு பிரதிநிதிகள் அப் பகுதிக்குச் சென்று நேரடியாக விசாரணைகளை மேற்கொண்டனர். பொலிசாரின் விசாரணை அறிக்கை கிடைத்த பின்பே இது பற்றிய கருத்துக்களை தங்களால் வெளியிடமுடியும் என கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்தார். (க)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட கல்முனை மக்களுக்கான நிரந்தர வீடமைப்பு திட்டம்

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கல்முனைப் பிரதேச மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான காணிகள் கொள்வனவு செய்யப்பட்டு அவை தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

சுனாமி அனர்த்தத்தினால் அம்பாறை மாவட்டத்தின் கல்முனைப் பிரதேசம் பெருமளவு பாதிக்கப்பட்டது.

கடலில் இருந்து 100 மீற்றருக்கு உட்பட்ட பிரதேசத்தில் வசித்து வந்தவர்களுக்கு நிரந்தர வீடுகளை அமைப்பதற்காக பொதுமக்களுக்கு சொந்தமான சுமார் 22 விவசாயக் காணிகள் கொள்வனவு செய்யப்பட்டு அவை கனரக இயந்திரங்களின் உதவியுடன் செப்பனிடப்பட்டு வருகின்றன.

கிறவல் மண்கொண்டு இந்தப் பிரதேசம் நிர்மாணிப்பதற்கு உரிய வகையில் தயார்ப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தச் செயற்திட்டத்தை நகர அபிவிருத்தி அமைச்சு மேற்கொண்டு வருகின்றது. (ப-9)

# சுனாமியால் பாதிக்கப்பட்டவருக்கு செஞ்சிலுவைச் சங்கத்தினர் உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் சுனாமியால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு பல்வேறு பொருட்களை அண்மையில் உதவியாக வழங்கியுள்ளனர்.

கரவெட்டி, சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, அல்வாய், கெருடாவில் தொண்டமனாறு ஆகிய இடங்களில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் சுமார் ஆயிரத்து 360 குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் அல்லாத பாவனைப் பொருட்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் வழங்கியுள்ளனர்.

இப்பொருட்களில் சமையலறை உபகரணங்களான வாளி, கோப்பை, குவளை, கத்தி, கரண்டி மற்றும் பாத்திரங்களும் அடங்கும்.

இவற்றுடன் படுக்கை விரிப்புகள், நுளம்புத்திரி, குழந்தைகளுக்கான நுளம்பு வலை, சவர்க்காரம், கம்பளிப் போர்வை, இறப்பர் விரிப்புகள், கூடாரங்கள், அரிக்கன் விளக்குகள் என்பவையும் அடங்கும். (க-7)

## ஓம் தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

**நாம் எந்த இடத்திலிருந்தாலும் கடவுள் நம்மை நிராகரிப்பதில்லை. அரண்மனையில் இருந்தாலும் ஆண்டியாக இருந்தாலும் ஆண்டவனின் கருணை என்பது சூரிய சந்திரர்களது ஒளியைப் போல் ஒன்றாகவே ஒவ்வொருவர் மீதும் படுகிறது. நம்முடைய அகங்காரம் நம்மை விட்டு நீங்கி அழிந்து போனால் தவிர பகவான் நம்மை அணுகமாட்டார்.**

சுவாமி விவேகானந்தர்

# தமிழ்–சிங்கள மொழிகளை கற்பிக்க தொண்டர் ஆசிரியர் நியமிக்கப்படுவர்

## கல்வி அமைச்சு அறிக்கை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களிற்கு தமிழ் சிங்கள மொழி களைக்கற்பிப்பதற்கான ஆசிரியர் களை நியமிப்பதற்கு விசேடதிட் டம் ஒன்றை அமுல்படுத்த உள் ளதாகக் கல்விஅமைச்சு தெரி வித்துள்ளது.

இதற்கு தொண்டர் ஆசிரியர்க ளை நியமிப்பதற்கான அமைச் சரவைப் பத்திரம் ஒன்றை ஜனா திபதி தயாரிக்க உள்ளதாக கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் வடக்கு கிழக்கு மாகாணத்தில் கல்வித்துறையில் நிலவும் சிக்கல்களைத் தீர்க்க முடியுமென கல்வியமைச்சு எதிர் பார்ப்பதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதேவேளை, வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் 193 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவ டிக்கை எடுக்கப்படவுள்ளது. இது தொடர்பாக அரச சேவைகள் ஆணைக்குழுவின் ஆலோசனை களைப்பெற நடவடிக்கை எடுத் துள்ளதாக கல்வியமைச்சு அறி வித்துள்ளது. (ச)

# விலகிச்சென்ற இராணுவத்தினருக்கு பொது மன்னிப்பு வழங்கத் தீர்மானம்

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து விலகிச் சென்றவர்கள் சட்டரீதியாக தமது சேவையிலிருந்து வில்குவதற்காக நாடாளவிய ரீதியிலான பொது மன்னிப்புக்காலம் ஒன்றை அறி விக்க அரசாங்கம் தீர்மானித்துள் ளது.

சேவையிலிருந்து விலகிச் சென்ற படையினர் பலரிடமிருந்து கிடைத்த கோரிக்கைகளைக் கருத்தில்கொண்டே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

இதுவரை 60 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் இராணுவத் திலிருந்து விலகிச்சென்றுள்ளதாக இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் தயாரட்னாயக்க தெரிவித்தார்.

இவர்களில் அதிகமானோர் இடைக்கிடை வழங்கப்பட்ட பொது மன்னிப்புக் காலத்தின்போது சட்ட ரீதியாக சேவையிலிருந்து விலகிக் கொண்டனர்.

விலகிச் சென்ற ஏனையவர்க ளையும் சட்டரீதியானதாக்க அடுத்த சில நாட்களுக்குள் இந்த பொது மன்னிப்புக் காலத்தை அறிவிக் கவுள்ளதாக இராணுவப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ச)

## வீதியில்...

குடும்பங்கள் தமது இருப்பிடங் களை இழந்துள்ளன. 250ற்கு மேற்பட்டவர்கள் உயிரிழந் துள்ளனர்.

இருப்பிடங்களை இழந்துள்ள குடும்பங்களுக்கு வீடமைப்பு வச திகளை ஏற்படுத்துவதில் தொடர் தும் தாமதங்கள் ஏற்பட்டு வருகி றது. நிரந்தர வீடமைப்பதற்குரிய காணிகள் இதுவரை அடையா ளம் காணப்படவில்லை. மற்றும் தமது மீள்குடியேற்றம், நிவார ணப்பணிகள் தொடர்பான நடவ டிக்கைகளில் அரசியல்வா திகளின் அசமந்தப்போக்கு ஆகி யவற்றைக் கண்டிக்கும் முகமாகவே இந்த வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக ஆர்ப்பாட்டக் காரர்கள் தெரிவித்தனர்.

வீதியில் கூடாரங்கள் அமைத்து தமதுஇருப்பிடங்களாக அதனைப் பிரகடனப்படுத்தியுள்ள நூற்றிற் கும் மேற்பட்ட குடும்பங்கள் சமை யலிலும் ஈடுபட்டுள்ளனர். மட்டக் களப்பு - கல்முனை வீதியில் மருதமுனை கிராமத்திற்கு இருபுற எல்லைகளிலும் மரக்குற்றிகள் போடப்பட்டு போக்குவரத்து சேவைகளும் தடைசெய்யப்பட் டுள்ளன. பிற்பகல் வரை வீதிமறி யல் பேராட்டம் தொடர்ந்து நடை பெற்றது என்றும் போராட்டம் தொடரும் என அறிவிக்கப்பட்டுள் ளது. (ச)

# தனியார் பல்கலைக் கழகம் அமைக்க அரசாங்கம் அனுமதி வழங்காது

## உயர் கல்விப்பிரதி அமைச்சர் தினேஷ்

தனியார் பல்கலைக்கழகங் களை அமைப்பதற்கு அரசாங்கமோ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவோ அனுமதி வழங் காது என உயர்கல்விப் பிரதி யமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவிக்கின்றார்.

இவ் விடயம் குறித்து அரசாங் கம் தெளிவான நிலைப்பாட்டில் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட் டினார்.

சில பாடநெறிகளுக்கான பட் டங்களை வழங்குவதற்கு இரண்டு தனியார் நிறுவனங்களுக்கு அனு மதி வழங்குவது குறித்து தற் போது பேச்சுவார்த்தை நடத்தி வரப்படுகிறது.

கல்வி மறுசீரமைப்பு தொடர் பாக ஆசிரியர்சங்கப் பிரதிநிதி களுடன் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சு வார்த்தையின் போதே பிரதியமைச் சர் தினேஷ குணவர்த்தன இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

உயர்தர பாடத்திட்டத்திலோ பல்கலைக்கழக அனுமதி முறை யிலோ திருத்தங்களை மேற் கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்காது எனவும் பிரதியமைச்சர் சுட்டிக்காட்டினார் (ச)

# சர்வதேச மகளிர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் தின் பெண்கள் அபிவிருத்தி திட் டப்பிரிவு 20 கிராமமாதர் சங்கங் கள் மாதர் குழுக்களுடன் இணைந்து சர்வதேச மகளிர்தின விழாவை கொண்டாடியது.

இந்நிகழ்வு நேற்றுக்காலை 9.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடை பெற்றது.

இந்நிகழ்வில் 'பெண்களும் தலைமைத்துவம்'என்ற தலைப்பில் திருமதி மனோன்மணி சண்முக தாசும் 'சமாதான செயல்முறையில் பெண்களின் பங்கு' என்ற தலைப் பில் பெண்கள் அபிவிருத்தி நிலை யத்தின் தலைவர் சரோஜா சிவச் சந்திரனும் உரையாற்றினார்கள்.

அத்துடன் தவில் நாதஸ்வர பெண்கலைஞர்களான தையல் நாயகி, செல்வநாயகி ஆகியோர் தம்து கலைத்திறனை வெளிப் படுத்தினார்கள்.

இதனைத் தொடர்ந்து 'சமூக மீள் கட்டமைப்பில் பெண்கள்' என்ற தலைப்பில் யாழ்.பல்கலைகக்கழக சமூகவியற்துறை விரிவுரையாளர் செல்வி டொறின் அருளானந்தமும் 'வாழ்க்கைப் போராட்டத்தில் பெண்கள' என்ற தலைப்பில் யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப் பாளர் கலைவிழியும் உரையாற்றி னார்கள். (க-19)

## வவுனியாவில்...

சடலமாக இது இருக்கலாம் என்று சந்தேகிப்பதாக இராணுவப்பேச் சாளர் தெரிவித்தார்.

இந்த சடலத்தை அடையாளம் காண்பிப்பதற்காக விசேட மரபணுபரி சோதனையை மேற் கொள்ள தீர்மானிக்கப்பட்டிருப்ப தாகவும் அவர் குறிப்பிட்டார்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் வவுனியாவில் இடம்பெற்ற இராணுவ பயிற்சிப்பாசறையின் போது இந்த நச்சுப்பொருள் உடலில்பரவியதால் பாதிக்கப்பட்ட 21பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தசம்பவத்தை அடுத்து அவர்களுக்கு பொறுப்பாக இருந் ததாகவும் அதிகாரி காணாமற் போய்இருந்ததாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரட்னா யக்க தெரிவித்தார். (ச)

# கிழக்கில் தொடரும்....

மேற்கொண்டுவரும் மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச்சம்பவத்தில் அருகில் நின்ற மற்றொருவர் காயமடைந்து வைத தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார். இந்தச்சம்பவத்தைய டுத்து பொலிஸார் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் நகரின் பிர தான சந்திகளில் சகல வாகனங் களையும் நிறுத்தி கொலையா ளிகளைக் கண்டுபிடிக்க சோதனை மேற்கொண்டனர். சில இளைஞர் கள் பொலிஸாரினால் விசார ணைக்கு உட்படுத்தப்பட்டுபின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இதற்கு முன்னதாக நேற்று முன்தினம் இரவு ஏறாவூர் பிரதேசத்தில் உள்ள தலவாய் என்னும் இடத்தில் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் ஒன்று இடம்பெற் றுள்ளது. அதில் கொல்லப்பட்ட வர் 27 வயதுடைய வேலுப்பிள்ளை இலங்கேஸ்வரன் என அடை யாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் ஏற்கனவே ஈ.பி.ஆர்.எல். எவ்,ராசிக்குழு ஊடாக இலங்கை இராணுவத்தின் தேசியதுணைப் படையில் பணியாற்றி ஒரு வருடத்துக்கு முன்னதாக வில கியிருந்தார் என்று கூறப்படுகின்றது.

நேற்று முன்தினமிரவு இவரது வீட்டுக்கு வந்த மூன்று பேர் இவரை வெளியே அழைத்துச் சென்று வீதியில் வைத்துச்சுட்டுக் கொன்று விட்டு தப்பிச் சென்றுள் ளதாக விசாரணைகளை மேற் கொண்டுவரும் ஏறாவூர் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினமிரவு வாழைச் சேனையில் வெலிக்கந்த கொழுப் பேப்பினையைச் சேர்ந்த சிவராஜா ரவீந்திரன் என்ற இளைஞன் துப்பாக கிச் சூட்டுக்கு இலக்காகி காயம டைந்துள்ளார். கருணா அணி யைச் சேர்ந்தவர் எனக் கூறப்படும் இவர்வெலிக்கந் தையில் இருந்து வாழைச் சேனைக்கு வந்த சமயம் அடையாளம் தெரியாத நபர் களினால் கடத்தப்பட்டு சுடப்பட்டு பொல நறுவ்வை வைத்தியசா லையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சுனாமி அன்ர்த்தத்தையடுத்து மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் பொலநறுவை மாவட்டங்களில் இத்தகைய சம்பவங்கள் ஓய்ந்தி ருந்தன.

கடந்த ஒரு மாதகாலத்துக் குள் இவ்மாவட்டங்களில் இடம பெற்ற வெவ்வேறு 15 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 25 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள். மேலும் 13 பேர் காயமடைந்துள்ளார்கள் என பொலிஸார் தெரிவித்துள் ளனர். (ச-04)

## பேச்சுவார்த்தையை...

பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்கள் உரியமுறையில் பகிரப்படவேண்டியதன் அவசி யத்தையும் அவர் வலியுறுத் தினார்.

அதேநேரம், தமிழீழ விடுத லைப்புலிகளுக்கும், அரசாங்கத் துக்கும் இடையில் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் தொடர்பில் பொதுகட்டமைப்பு அவசியம் எனவும், அதனை உணர்ந்து பொதுகட்டமைப்பை உடனடியாக ஏற்படுத்துமாறு அவர்கேட் டுக்கொண்டார். (04)

## மாணவர்...

இச்சம்பவம் போர்நிறுத்த ஒப்பந்த மீறல் என்பதைக்கண்காணிப் புக்குழு தெரியப்படுத்தவேண்டும் என மாணவர்பேரவையினர் கண் காணிப்புக் குழுவினரிடம் கேட் டுள்ளனர்

இதேவேளை, கண்காணிப்புக் குழு அதிகாரி நேற்று பரமேஸ் வராச்சந்தியில் அமைந்துள்ள கடை உரிமையாளர்களையும் சந்தித்து விபரங்களைப்பெற்றார். (ச-19)

## யாழ்...

கடந்த 28 ஆம் திகதி துணை வேந்தருக்கு அனுப்பிய கடிதம் மற்றும் கடந்த 7 ஆம் திகதி துணைவேந்தருடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் விபரம் என்பன தொடர்பாக அறியத் தரப்படும் என ஊழியர்சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (ச-95)

## காலியில்...

வழங்கப்பட்ட நிவாரணங்களில் அதிகமானவை கிடைக்கவில்லை என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரி வித்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் காலி, மாத்தறை வீதியை வழிமறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதேவேளை தங்காலை பிரதேச செயலகம் முன்பாகவும் ஆர்ப் பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது. (ச-08)

## பொதுக்கட்டமைப்புக்கு...

நேற்று விகாரமாதேவி பூங்கா வில் நடைபெற்ற மகளிர்தின நிகழ்வில் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் இரு தசாப்த காலமாக தீர்வின்றி எட்டாக்கனி யாகக் காணப்படும் இனப்பிரச்சி னைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணப்படவேண்டும் என்பதில் இரண்டு பிரதான கட்சிகளும் உடன்பட்டுள்ளன.

நாட்டில் சமாதானத்தை ஏற் படுத்துதலே அரசின் முதற்கட்டப் பணியும், முக்கிய குறிக்கோளு மாகும். சமாதானம் ஏற்பட்டால் மக்கள் நிம்மதியாக, சுதந்திரமாக வாழமுடியும் என நினைக்கிறார் கள். அதனைக் கருத்திற்கொண்டு நாங்கள் கடினமாகச் செயற்பட்டு வருகின்றோம்.

யுத்தம்மூலம் சமாதானம் ஏற் படுத்தப்படமாட்டாது. அதனை நாங்கள் அனுபவரீதியாகவும், உணர்வுபூர்வமாகவும் கண்டுள் ளோம். இனியும் நாங்கள் யுத் தத்தை நினைத்துக்கூடப் பார்க்க முடியாதநிலையில் உள்ளோம் எனத் தெரிவித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிர தேசங்களைப் புனரமைப்புச் செய் வதற்கு விடுதலைப் புலிகளும், அரசும் இணைந்த பொதுக்கட்ட மைப்பினை உருவாக்கவேண்டும் எனப் பல்வேறு தரப்பினர் வலியு றுத்தி வருகின்றனர்.

ஆனால் நாங்கள் அதனை ஏற்படுத்தத் தயாராகவுள்ளோம். இதனைப் புலிகளுக்கு அறிவித் துள்ளபோதும் அதற்கு எவ்வித பதில்களையும் இதுவரை உத்தி யோகபூர்வமாக அறிவிக்கப்பட வில்லை.

இதனைத் தொடர்ந்து அவர் கள் காலம்தாழ்த்தி வருவார்களா னால் பொதுக்கட்டமைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என்று எச்சரிக்கை விடுத்தார்.

பொதுக்கட்டமைப்பை உரு வாக்க விடுதலைப் புலிகள் தயா ரென உடனே அறிவித்தால் நாங் கள் அதனை உருவாக்கி அதன் மூலம் சமாதானப் பேச்சுவார்த் தையைக் கொண்டுசெல்லத் தயா ரென ஜனாதிபதி தெரிவித்தார்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு சில விடயங் களுக்குத் தீர்வுகாணப்பட்டாலும், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப் படாவிட்டால் வறியநாடான இந்த நாட்டை கட்டியெழுப்பமுடியாது என ஜனாதிபதி தெரிவித்தார்.

பொருளியல், விஞ்ஞான அறி வில்லாத சில அரசியல்வாதிகளும், சில கட்சிகளைச் சேர்ந்தவர்க ளும் நாட்டைத் தனித்துக் கட்டி யெழுப்பமுடியும் எனக்கூறினால் அதனைச் செயலில் காட்டட்டும் என்று ஜனாதிபதி சவால்விடுத் துள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு ஏனைய நாடுகள் உதவியிருக்காவிட்டால் நாட்டைக் கட்டியெழுப்பமுடியாது என்றும், அதுவே நிதர்சனம் என்றும் அவர் தெரிவித்தார்.

தமது அரசாங்கம் 41 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கி யுள்ளது எனத் தெரிவித்த அவர், இம்மாத இறுதியில் கல்விப் பொதுத்தராதர, சாதாரணதர மற் றும் உயர்தரத்தில் பயின்றவர் களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் உறுதி யளித்தார். (ச-04)


## தவறிவிட்டது

கரவெட்டி சாமியன் அரசடியி லிருந்து நெல்லியடி செல்லும் போது இராமையா ரவிச்சந்திரன் என்பவரின் தேசியஅடையாள அட்டை (832013749V) மற்றும் கொமஷல் வங்கி கற்காட், குறிப்புப்புத்தகம் அடங்கிய பேர்ஸ் 7.3.2005 இல் தவறிவிட்டது. நெல்லியடி மருதம் தொலைத் தொடர்பு நிலையத்தில் (0776301152) ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (1159)

## அன்புள்ளங்களுக்கு நன்றிகள்



இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் கல்விச் சமூகத்தினால் முன்னெடுக்கப்பட்ட கணித ஆசான் திரு. த.வரதராஜா அவர்களின் பொன்விழா சிறப்பு மலருக்கான ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள், விளம்பரங்கள் வழங்கியவர்களுக்கும், விழாவில் கலந்து சிறப்பித்தவர்களுக்கும், விழா சிறக்க எம்முடன் இணைந்து தோள் கொடுத்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

விழாநாயகரின் வேண்டுகோளுக்கிணங்க விழாவை எளிமையான முறையில் நடாத்த வேண்டி இருந்ததால், நாம் அழைப்புக்களை மட்டுப் படுத்தியிருந்தோம். இதனால் இவ்விழாவில் கலந்து கொள்ள முடியாமற்போனவர்களின் மனத் தாக்கத்திற்காக வருந்துகின்றோம்.

The Express Institute Irupalai, Kopay. THE EXPRESS INSTITUTE KOPAY A BOON TO STUDENTS

– வரதர் பொன்விழாச் சபையினர்

நிறைஞ்சனாஸ் சினிமா சங்கானை

சிம்பு, சோனியா அகர்வால் நடித்த



கோவில்

கா.நே: 11.00,2.45,6.00 :(பு.நே)

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம் [ஆஸ்பத்திரிக்கு முன்பாக]

குளிரூட்டியது

விஜய், சங்கவி, சுபலக்சுமி நடித்த

நிலவேவா

கா.நே 10.30, 2.30 6.30, 9.30 (பு.நே)

பலருடைய பாராட்டுதலையுமிபெற்ற இத்திரைப்படம் முதல் முதலாக இலங்கையில் திரையிடப்படுகின்றது.

எமது அடுத்த வெளியீடு தாவடி மைந்தன் நடிக்கும் குருதேவா

மனோகரா யாழ்.

இளையதளபதி விஜய், ரவி கிருஷ்ணா, நதிஷா, ரம்பா

இயக்கம்: S.A.சந்திரசேகரன்



கா. நே. 10.30, 2.30, 6.30, 9.30

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு